திங்கள் | ஆடி 1

📖 மாலை வாசகம் – 1 பேதுரு 2:9

# "உன் ஒளி வந்தது"

பிரியமான சகோதரரே, நீங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்யும்படி, அந்தகார இருளிலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளிக்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றீர்கள் என்றும் நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே என்று பரிசுத்தவேதாகமம் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மைக் குறித்து கூறுகின்றதைக் காணலாம். பகலின் பிள்ளைகள் வெளிச்சத்திலே நடப்பதினாலே, அவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருந்து, இந்த உலகத்தின் மாயையான வழிகளிலே சிக்குண்டு இடறி விழாமல் இருக்கின்றார்கள். ஏனெனில் ஜீவ ஒளியாகிய தேவ வசனம், நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாகயிருக்கின்றபடியால், பகலிலே நடமாடுகின்றவர்களைப் போல தீமையின் கண்ணிகளை தெளிவாக காண்கின்றோம். ஆனால் திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருக்கின்றவர்கள் ஒளியை வெறுத்து, இருளைப் பற்றிக் கொள்வதால் போகும் வழியிலே இடறுகிறார்கள். நித்திய வாழ்வைக் அருளும் தேவ ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் அந்த ஒளியைப் பார்க்கிலும், அந்தகார இருளின் கிரியைகளையே விரும்புகின்றதால், தங்கள் அழிவைத் தாங்களே தீர்மானித்துக் கொள்கின்றார்கள். ஆகையால், பரிசுத்த வேதாகமம்கூறும் அறிவுரையின்படி மற்றவர்கள் இருளிலே தூங்குகிறதுபோல நாம் இருளிலே தூங்காமல், பகலுக்குரிய வெளிச்சத்தின் பிள்ளைகளைப்போல விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். ஆத்துமாவுக்கு விரோமமாக போர்செய்கின்ற மாம்ச இச்சைகளை விட்டு விலகுங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் மற்றவர்களுடைய ஒளியிலே நடக்கின்றவர்களாக வாழாமல், தேவனுடைய ஜீவ ஒளியாகிய சத்திய வசனம் உங்களில் நிலைத்திருக்கக்கடவது. திராட்சைசெடியாகிய இயேசுவில் ஒட்டப்பட்டு நிலைத்திருக்கின்ற கிளைகளாக நாம் எப்போதும் காணப்படவேண்டும். அந்த இணைப்பானதுவேறுறொருவர் வழியாக உண்டாவதில்லை. நாம் இயேசுவோடு சேர்ந்திருப்பதற்கு இன்னுமொரு மத்தியஸ்தர் தேவையில்லை. நாம் ஒவ்வொருவரும், இந்த உலகத்திற்கு ஒளிவீசும் சுடர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றோம்.

**ஏசாயா 60:1**

**எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல்உதித்தது.**

**ஜெபம்:** இரட்சிப்படைவதற்கென்று என்னை நியமித்த தேவனே, நான் இருளிலே நடவாமல், ஜீவ ஒளியிலே நடக்கும்படிக்கு, உம்முடைய திருவசனத்திலே நிலைத்திருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# “உங்களுடைய வெளிச்சம்”

ஒரு விவசாயினானவன், தன் பிரயாசத்தின் விளைச்சல்களை சந்தைப்படுத்தும் பொருட்டு, அடுத்த ஊருக்கு செல்லும்படிக்கு, அதிகாலையிலே துரிதமான புறப்பட்டுச் சென்றான். மாலையிலே இருட்டுவதற்கு முன் வீடு திரும்புவதாக எண்ணியிருந்தபடி திரும்ப முடியாமல் தாமதமாயிற்று. அதிகாலையிலே அவசரவசரமாக சந்தைக்கு செல்ல ஆயத்தப்பட்டதால், அவன் விளக்கு பந்தத்தை தன்னோடு எடுத்துச் செல்ல மறந்து போனான். திரும்பும் வேளையிலே இருட்டிவிட்டாதால், போகும்பாதை சரியாக தெரியவில்லை. ஆதலால், தனக்கு முன்பாக சென்ற வியாபாரியானவனின் கையிலே விளக்கு பந்தம் இருந்ததால், அந்தப் பந்தத்தின் வெளிச்சதிலே அந்தப் அவனுக்கு பின்பாக நடந்து சென்றான். இந்த விவசாயிபோகும் பாதை அந்த வழியாக சென்ற வியாபாரியின் கரங்களிலே தங்கியிருந்தது. பரம அழைப்பின் பந்தையப் பொருளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் அருமையான சகோதர சகோதரிகளே, கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாக வாழும்படிக்கு நாம் ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிறவர்களாக காணப்பட வேண்டும். மாறாக, நாம் வேறொருவரின் வெளிச்சத்திலே நடக்கின்றவர்களாக காணப்படும் போது, நம்முடைய உன்னதமாக ஜீவ யாத்திரையின் பொறுப்பை வேறொருவரின் வாழ்க்கையிலே தங்க வைத்து விடுகின்றோம். இன்று சில விசுவாசிகள் இவ்வண்ணமாகவே, அங்கே போதனை இங்கே போதனை என்று பிரபல்யமானவர்களை தங்கள் ஜீவ ஓட்டத்தின் வெளிச்சமாக வைத்து கொள்கின்றார்கள். மனிதர்களாகிய அவர்கள் தவறி விடும் வேளையிலே, அவர்களை நம்பியிருந்த இந்த விசுவாசிகள் ஏமாற்றமடைந்து, சோர்ந்து, பின்னிட்டு திரும்பிவிடுகின்றார்கள். நாம் நம்முடைய பேச்சிலும் கிரியைகளிலும் ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்ய வேண்டும். ஆனால், நம்முடைய அருமையான இரட்சிப்பின் பொறுப்பை இன்னுமொருவரின் கையிலே கொடுத்து விட முடியாது. எந்நேரமும், எவ்வேளையும், நாம் ஜீவ வசனத்தை மறந்து போய்விடக்கூடாது. எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அவை யாவும் தேவனுடைய வசனத்தின்படி இருக்கும்படிக்கு, தேவ வசனமே நம்முடைய தியானமாக இருக்கட்டும்.

**பிலிப்பியர் 2:14**

**ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்,**

**ஜெபம்**: ஜீவ ஒளியை என்னில் பிரகாசிப்பித்த தேவனே, மனுஷர் என்னுடைய நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உம்மை மகிமைப்படுத்தும்படி என்னுடைய வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் மத்தியஸ்தர் யார்?

அக்காலத்திலே, பிரதான ஆசாரியன் வருஷத்திற்கு ஒருதரம், தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் பலிகளை செலுத்தும்படி, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செலுவான். மற்றய ஆசாரியர்களோ, ஜனங்களோ அந்த இடத்திற்கு செல்ல முடியாது. வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய இயேசு கிறிஸ்துதாமே, மனித குலத்தின் அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். பழைய ஏற்பாட்டின் பலிகளும் முறைமைகளும் வரவிருக்கும் காரியங்களுக்கு நிழலாக இருந்தது. நிஜமான காரியமானது ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்பட்டது. நிஜமானது நமக்காக ஆயத்தப்பட்டிருக்கின்றபோது, நிழலானதை ஒருவரும் பற்றிக் கொள்வதில்லை. இக்காலத்திலே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்த்தினாலே சுத்திகரிக்பபட்டு, பரிசுத்தவான்களாக அழைக்கப்பட்ட நாம், சீர்பொருந்தும்படிக்கு சபையையும் ஊழியங்களையும் ஏற்படுதினார். அந்த சீர்பொருந்துதலின் காரியமானது, உயிரோடிருக்கும் ஊழியர்களோ அல்லது கர்த்தருக்குள் பரிசுத்தமாக வாழ்ந்து இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றிருக்கும் பரிசுத்தவான்களோ தேவனுக்கும் நமக்குமிடையினாலே உள்ள மத்தியஸ்தர்கள் என்பது பொருளல்ல. மாறாக, தற்போதிருக்கும் ஊழியர்களும், நமக்கு முன்பாக சென்று வெற்றி வாழ்க்கை வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்திருக்கும் திரளான மேகம் போன்ற சாட்சிகளும், நம்மை ஆண்டவர் இயேசுவோடு இன்னும் கிட்டே சேர்வதற்கு ஆதரவளிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும், ஒருவருக்காக ஒருவர் பரிந்துபேசி ஜெபிப்பதற்கும், ஒருவரை ஒருவர் தாங்கி, ஊக்குவித்து, பக்திவிருத்திகேதுவானவைகளை செய்ய வேண்டும். அதனால், நாம் மத்தியஸ்தர்கள் ஆகிவிடுவதில்லை. தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. பிரியமானவர்களே, என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைகளை அனுதினமும் தியானித்து, அவரோடுள்ள உறவிலே வளர்ந்து பெருகுங்கள்.

**எபிரெயர் 9:15**

புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, மத்தியஸ்தருக்குரிய இடத்தை எந்த மனிதர்களுக்கும் கொடுக்கபாதபடிக்கு, ஆண்டவர் இயேசுவிலுள்ள உறவிலே அனுதினமும் வளர்ந்து பெருக என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தீவட்டிகள்

ஒரு தகப்பனானவர், தன் மனைவி பிள்ளைகளோடு வாரஇறுதி நாட்களை கழிப்பதற்காக காட்டு பிரதேசத்தோடு சார்ந்த ஆற்றங்கரை அருகிலுள்ள தங்கள் கிராமப்புற மனைக்கு (Cottage) சென்றிருந்தார்கள். அந்த இடத்திலே மின்சார வசதிகள் இல்லாதிருந்ததால், மின்கலத்தில் (Battery)வேலைசெய்யும் மின்விளக்குகளை தங்களோடு எடுத்துச் சென்றார்கள். பாதி இரவு கழிந்ததும், மின்கலங்கள் முழுமையாக திறனேற்றப்படாததால் (Not fully Charged), அதிலுள்ள மின்சார பற்றக்குறையினால் மின்குமிழ்கள் அணைந்து போயிற்று. அதனால அவர்கள் பாதி இராத்திரியை வனவிலங்குகளுள்ள தனிப்படுத்தப்பட்ட இடதிலே, செலவிடப்பட வேண்டியதாயிற்று. அதன் அடிப்படைக் காரணம் என்ன? மினகலங்கள் மின் சாரத்தின்மூலத்தொகுதியோடு இணைக்கப்பட்டிருக்கவில்லை. உலகத்திற்கு ஒளியாக இருக்கும்படி அழைப்பட்ட அருமையான சகோதர சகோதரிகளே, உங்கள் வெளிச்சம் எரிந்து கொண்டிருக்கும்படி அதை அனல் மூட்டி எரிய விடுங்கள். இந்தப் பூலக வாழ்க்கையிலே, ஓய்வு நேரங்களை நாடி, மனிதர்கள் பற்பல இடங்களுக்கு சென்று, அநேக காரியங்களை செய்துவருகின்றார்கள். இதற்கு விசுவாச மார்க்கத்தாரும் விதிவிலக்கானவர்கள் அல்ல. வியபாரம், கல்வி, கொண்டாட்டங்கள், சுற்றுலா, உல்லாசம் போன்ற பயணங்கள் தவறானது என்பது பொருளல்ல. நீங்கள் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும், திராட்சைசெடியாகிய இயேசுவோடு இணைந்திருக்கும் தொடர்பை வெட்டிவிட்டு, திறனேற்றப்படாத மின்கலங்களை எடுத்துச் சென்ற அந்தக் குடும்பத்தாரைப் போல, உங்கள் சுயபலத்திலே சார்ந்து, பயணங்களையும், தீர்மானங்களையும் எடுக்க எத்தனிப்பீர்களானால், நீங்கள் இருளிலே போக வேண்டிய பாதை எது என்று தீர்மானிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். தங்கள் மணவாளன் வரக் காத்திருந்த, புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள், தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். நாம் சகல சத்தியத்திலும் நடக்கும்படியாக, நம்மோடு என்றென்றும் இருந்து நம்மை வழிநடத்தும்படிக்கு சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை நமக்கு தந்திருக்கின்றார். அந்த அபிஷேகத்திலே நிலைத்திருங்கள். இரட்சிப்பின் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள்.

**மத்தேயு 25:4**

**புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, மனுஷகுமாரன் வரும் நாளை நான் அறியாதிருக்கிறபடியால், நான் உணர்வுள்ள இருதயத்தோடு விழிப்பாய் இருக்க தூய ஆவியின் அபிஷேகத்தை தந்து அனல்மூட்டி எரியச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கருத்துள்ள வாழ்க்கை

திருமணத்தின் ஆரம்ப நாட்களிலே இளம் தம்பதிகள், புரிந்துணர்வோடு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார் கள். "இதுதான் வாழ்க்கை! இதெற்கெல்லாம் எங்களுடைய பெற்றோர் ஏன் இவ்வளவாய் கஷ்டப்பட்டார்கள்" என்று கூட ஆச்சரிப்பட்டார்கள். நாட்கள் கடந்து செல்லும் போது, அவ ர்களுடைய சந்தோஷம் குறைவுபடத் தொடங்குவதையும், வாழ்க்கை முன்பு போலவே சலிப்புள்ளதாக வழமைக் குத் திரும்புவதை உணர ஆரம்பித் தார்கள். அவர்கள் சட்டபூர்வமாகவும், தேவ சமுகத்தின் முன்னிலையிலும், கணவன் மனைவியாக அங்கீகரிக்க ப்பட்டிருந்த போதும், அவர்கள் ஐக் கியமாக வாழ்வதற்கு, ஒருவரை ஒரு வர் புரிந்து கொண்டு, நல்லிணகத்தோடு, அன்பிலே வளரும்படிக்கான கிரியைகள் நடப்பிக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்து கொண டார்கள். சிலர் அவ்வண்ணமாகவே ஒன்றுபட்டு, நற்கிரியைகளை நடப்பி த்து தங்கள் வாழ்க்கையில் வரும் சவால்கள் யாவற்றையும், இருவரு மாக மேற்கொண்டு வெற்றி வாழ்க்கை வாழ தங்களை அர்பணித்துக் கொள்கின்றார்கள். வேறு சிலரோ, தங்கள் கண்போன போக்கிலே வாழ் ந்து, திருமண ஒப்பந்தத்தை உடைத்துக் கொள்கின்றார்கள். இன்னும் சிலரோ, என்ன செய்வது, மனிதர் முன்னிலையிலும், தேவன் முன்னி லையிலும் என் வார்த்தையை கொடுத்து விட்டேன். எப்படியாவது, இந்த வாழ்க்கையை சுமக்க வேண்டும் என்று மனச்சலிப்போடு தினமும் கட மைகளை செய்து வருகின்றார்கள். மேற்கூறியவைகளை மையமாக வைத்து, கிறிஸ்துவோடுள்ள உங்கள் உறவை நீங்களே ஆராய்ந்து பார் க்க முடியும். உபத்திரவங்களும் சவால்களும் அதிகமாக இருக்கின்றதே, இனி என்னால் முடியாது என்று பின்வாங்கி, கிறிஸ்துவை விட்டு ஓடிவிடலாம் என்ற எண்ணமுடையவர்களாக இருக்கின்றீர்களா? அல்லது என்ன செய்வது? பலர் முன்னிலையில் ஞானஸ்நானம் எடுத்து விட் டேனே, ஏதோ சமாளித்துக் கொண்டு போவோம் என்று அரை மன தோடு வாழ்கின்றீர்களா? அப்படியாக அல்ல பிரியமானவர்களே, உயர் விலும், தாழ்விலும், வேதனையிலும் சோதனையிலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு என்னை ஒன்றும் பிரிக்காது என்ற நிச்சயத்தோடு, வெற்றி வாழ்க்கை வாழும்படி நாம் நம்மை முழுமனதோடு அர்பணிக்க வேண் டும். சத்திய ஆவியானவர்தாமே பெலன் ஈந்து சகல சத்தியத்திலும் நம்மை வழிநடத்திச் செல்வாராக.

**கொலோசெயர் 3:24**

**எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய் யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங் கள்.**

**ஜெபம்:** முடிவில்லா வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு கிரி யைகளை நடப்பிக்காமல், முழு இருயத்தோடு உம்மை சேவிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கனிகளால் உறுதி செய்யப்படும்

ஒரு ஊரிலே, பல தசாப்தங்களாக நடந்து வந்த யுத்தத்தினாலே, சமுதாய சீர்குலைவுகள் சில தலைமுறைகளாக நடைபெற்றுக் கொண்டிருந்ததினால், சீரற்ற வாழ்க்கையானது, புதிய தலைமுறையின் வழக்கமாயிற்று. ஏனெனில், அவர்கள் பிறந்த நாளிலிருந்து கண்டிடறிந்த யாவும், சீரற்றதாகவே இருந்தது. அப்படியாக, தன் கண்போன போக்கிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், சீர்வாழ்வைத் தேடி, சீரும் செழிப்புமான ஒரு தேசத்திற்கு சென்று தஞ்சம் புகுந்தான். அந்த தேசத்தின் குடியுரிமைகளையும் அதனால் உண்டாகும் உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுக் கொள்வதற்காக, சில ஆண்டுகள் தரித்திருந்து, அதற்கு தேவையான முன்தகமைகள் யாவையும் படிப்படியாக நிறைவேற்றி முடித்தான். அந்த கால எல்லையும், முன் தகைமைகள் யாவும் நிறைவேறிய போது, அவன் அந்த அந்தஸ்தை பெற்றுக் கொண்டான். பிரியமானவர்களே, அந்த மனிதனாவன், அந்த தேசத்தின் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்குரிய நிபந்தனைகள்யாவும் நிறைவேற்றும், எல்லா படிமுறைகளையும் செய்து முடித்தான். அதன் பலனாக அவன் குடியுரிமை சாட்சிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டான். அந்த பத்திரத்தை அவன் பெற்றுக் கொண்டதினாலே அவன் உண்மையாக அந்த சீரும் செழிப்புமுள்ள தேசத்தின் நல்ல குடிமகனாக, அந்த தேசத்தாரைப் போல நெறிமுறைகளோடு வாழ்வான் என்பது நிச்சயப்படுத்தப்பட்டாயிற்று கூறுவீர்களா? அல்லது, அவன் இனி எப்படி வாழப்போகின்றான் என்பதையும், அவன் வாழ்க்கையில் வெளிப்படும் கனிகளையும் வைத்து, அவன் உண்மையிலே அந்த தேசத்தின் குடிமகனானவனைப் போல வாழ்கின்றான் என்று கூறுவீர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒருவன் ஞானஸ்நான சாட்சிப் பத்திரத்தை வைத்திருப்பதினாலும், அவன் ஞாயிறுதோறும் சபைக்கு சென்று வருகின்றான் என்பதாலும் அவனை கிறிஸ்தவன் என்று கூற முடியுமா? அவைகள் அவன் பெயரவில் கிறிஸ்தவன் என்று காண்பிக்கும். வேதத்தி லுள்ள நிபந்தனைகளும் ஒழுங்கு முறைகளும் மிக அவசியமானவைகள். ஆனால், ஒருவன் அதை மனதாரக் கைக்கொண்டால், அவன் கிறி ஸ்துவை உடையவனாக இருப்பான். அவன் கிறிஸ்துவையுடையவன் என்பதை அவன் வாழ்க்கையில் வெளிப்படும் கனிகள் உறுதிப்படுத்தும்.

**எபேசியர் 4:24**

**மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, நான் முந்தின நடக்கைக்குரிய பழைய மனுஷனின் சுபாவங்களை களைந்துபோட்டு, உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவனாக வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – சங்கீதம் 139:1 –2

# உள்ளத்தில் மறைந்திருப்பதை யார் அறிவார்?

இன்னும் இரண்டு கிழமைகளில் என் பாடசாலை நண்பர்களோடு நான் சுற்றுலா செல்ல வேண்டும். அதற்காக அனுதிமதியை பெற்றுக் கொள் வதற்கு, இந்நாட்களிலே நான் என் அப்பாவிற்கு பிரியமாக நடந்து கொள்ள வேண்டும் எனவே நான் இன்று மாலை அந்த வயல்பக்கமாக விளையாடுவதற்கு வரமாட்டேன். அப்பா எனக்கு இரண்டு மாததிற்கு முன் கொடுத்த சில வேலைகளை இந்தக் கிழமை நான் செய்து முடிக்கப் போகின்றேன் என்று ஒரு வாலிபனானவன் தன் நண்பனுக்கு கூறிக் கொண்டான். இவ்வண்ணமாக அவன் சுற்றுலாவிற்கு செல்ல தன் தகப்பனானவருடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளும்வரைக்கும், அவன் மிகவும் கவனத்துடன், தகப்பனானவர் கூறிய ஒழுங்கு முறைகள் யாவற்றையும் கைகொண்டு, கீழ்படிவுள்ளவனாக இருந்து வந்தான். இள வயதும், அறியாமையும், வாழ்வின் தார்பரியத்தையும், தன் தகப்பனானவர் ஏன் தன் நாளாந்த நடவடிக்கைகளைக் குறித்து மிகவும் கரிசணையுள்ளவராக இருந்து வருகின்றார் என்பதை உணர்ந்து கொள்ளமுடியாமல் அவன் மனக் கண்களை மறைக்கப்பட்டிருந்தது. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கும் அருமையான சகோதர சகோதரிகளே, மேற்கூறிய சம்பவத்திலே தன் தகப்பனானவர் தன் மகனானவனைக் குறித்து மனதில் கொண்டிருக்கும் மேலான நோக்கத்தை உணராமல், குறுகிய கால மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் படிக்கு, அந்த மகனானவன் தன் தகப்பனானவருக்கு முன்பாக நல்ல வேடம் போட்டுக் கொண்டான். இன்று சிலருடைய கிறஸ்தவ வாழ்வும் இப்படியாக இந்த பூவுலகத்தின் அற்ப ஆசைகளையும், அழிந்து போகும் ஆசீர்வாதங்களையும் குறித்ததாகவே இருக்கின்றது. வெளியிலே தேவ பக்தியின் வேடமும், உள்ளே உலக ஆசைகள் நிறைந்ததாவும் இருக்கின்றது. ஒரு வேளை இந்த பூவுலகிலுள்ள தகப்பன்மார், அத்தகைய வேடங்களை கண்டு, நம்பி, ஏமாந்து போகலாம். ஆனால், மனதின் யோசனைகளை அறிந்த நம்முடைய பரம தந்தையாகிய தேவனாகிய கர்த்தர் முன்னிலையில் யார் வேடம் போட முடியும்? மனுஷருக்கு முன் நீதிமான்கள் என்று புறம்பே காட்சியளித்து, உள்ளத்திலோ மாயத்தினால் நிறைந்திருக்கிறவர்களைஆண்டவராகிய இயேசு கடிந்து கொண்டார். எனவே நாம், மேலே கூறப்பட்ட சம்பவத்திலுள்ள மகனானவனுடைய வாழ்க்கையை அல்ல, நாம் நம்முடைய வாழ்க்கையை உய்ந்து ஆராய்ந்து அறிந்து, தேவனிடத்திலே திரும்ப வேண்டும்.

**ரோமர் 8:27**

**இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்தறிக்கின்ற தேவனே, மாய்மாலமான வாழ்க்கையை நான் வாழாதபடிக்கு, உமக்கு முன்பாக உண்மையுள்ளவனாக காணப்படும்படி, உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# முதன்மையானது எது?

ஒரு மனிதனானவன், தன் உத்தியோகத்தின் ஆரம்ப நாட்களிலே, தான் வாழும் தேசத்திலுள்ள குறிப்பிடப்பட்ட பெரிய ஸ்தாபனமொன்றின் தலைவராக வரவேண்டும் என்பதை தன் வாழ்வின் பிரதானமான இலக்காக கொண்டான். அதற்கேற்றபடிக்கு, எந்தெந்த நண்பர்கள், உறவினர்கள் தன் இலக்கை அடைவதற்கு தடையாக இருப்பார்கள் என்று ஆராய்ந்தறிந்து, அவர்களை தன்னைவிட்டு தூரப்படுத்திக் கொண்டான். இப்படியாக தன்னுடைய வாழ்க்கை முறை, பொழுது போக்கு, தான் இருந்த ஊர் யாவற்றையும் மாற்றிக் கொண்டு, தான் புதிதாக சென்ற ஊரிலே, இந்த உலகிலே தன் இலட்சியத்தை அடைவதற்கு தடையில்லாமல், ஆதரவாக இருக்கும்சிறப்பு குடிமக்கள் சென்று வரும் ஆலயத்தையும், போதகரையும் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டான். ஆலயமும், கிறிஸ்தவ வாழ்க்கையையும்,அவனுடைய பிரதான இலக்கின் ஒரு சிறுபகுதியாக வைத்துக் கொண்டான். இவ்வண்ணமாகவே இன்று சிலர், இந்த உலகத்திலே தாங்கள் அடைய வேண்டிய இலக்குக்கு ஒரு வேளை தேவன் ஆதரவாக இருப்பாராக இருந்தால், அவரையும் எங்களுடைய திட்டத்திற்குள் போட்டுக் கொள்வோம் என்ற மனநிலையுடையவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் வாழ்வில் பிராதானமாக இலக்கு என்ன சென்று ஒருவர் உங்களிடம் கேட்டால் நீங்கள் கூறும் பதில் என்னவாக இருக்கும்? சிலர், தாங்கள் வைத்தியராக வேண்டும், உலக விளையாட்டுப் பந்தையப் போட்டியிலே தங்கப் பதக்கம் பெற்றுக் கொள்ள வேண்டும், என்னுடைய பிள்ளை இந்த தேசத்திலே பெரியவான வரக் காணவேண்டும் என்று பற்றபல இலக்கு களை கொண்டுள்ளார்கள். இந்த உலகிலே அவர்கள் அவற்றை பின் தொடர்ந்து அவர்களில் சிலர் அதை பெற்றுக் கொள்கின்றார்கள். ஒருவனுடைய இலக்கானது பரலோகத்திற்குரியதாக இருந்தால், அவனுடைய பூவுலக வாழ்வின் திட்டங்கள் யாவும் அந்த இலக்குக்கு உட்பட்டதாக இருக்கும். ஆனால், ஒருவனுடைய இலக்கானது இந்த பூவுலகம் சார்ந்த தாக இருந்தால், பரலோகம் அவனுடைய இலக்குக்குள் கட்டுப்பட்டு இருப்பதில்லை. அழியாமை அழிவுக்குரியதால் ஆளப்படுவதில்லை. எனவே பரலோகத்தை உங்கள் வாழ்க்கையின் பிரதான இலக்காக கொண்டிருந்தால், உங்கள் வாழ்க்கையின் மற்றய திட்டங்கள் யாவும் அந்த மேன்மையான இலக்கிற்கும், தேவ சித்தத்திற்கும் உட்பட்டிருப்பதாக.

**பிலிப்பியர் 3:11**

**அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.**

**ஜெபம்**: மேன்மையான பரமதேசத்திற்காக என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தின் மாயைக்குள் சிக்குண்டு பின்னிட்டு போகாதபடிக்கு, பெற்றுக் கொண்ட மேன்மையை உணர்ந்து வாழ கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனந்திரும்புதலும் மன்னிப்பும்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த குடும்பத்தினர், தங்களுடைய பிள்ளைகளில் ஒருவனின் தவறான நடத்தையினாலே வெகுவாய் அவமானமடைந்தார்கள். அதனால், அந்த ஊரிலே இனி வாழ்வது கஷ்டமாக இருந்ததால், தூரத் தேசத்திலுள்ள ஊரொன்றுக்கு சென்று அங்கே வாழ்ந்து வந்தார்கள். புதிய ஊரிலுள்ள ஜனங்கள், ஏன் ஊர்விட்டு ஊர்மாறியிருக்கின்றீர்கள் என்று கேட்கும் போது, அதற்கு மறுமொழியாக, முன்பு இருந்த ஊரின் பொருளாதார நிலைமைகள் நன்றாக இல்லை, எனவே பிள்ளைகளின் எதிர்காலம் கருதி, இந்த ஊருக்கு இடம்பெயர்ந்தோம் என்று கூறிக் கொள்வார்கள். அவர்கள்கூறிய மறுமொழியில் உண்மை உண்டு. அதாவது, அவர்கள் முன்பு வாழ்ந்த ஊரின் பொருளாதர நிலைமை சீராக இருக்கவில்லை. அதே வேளையில் அவர்கள் கூறிய மறுமொழியில் உண்மையற்ற நிலையும் உண்டு. அதாவது, அவர் தாங்கள் வாழ்ந்த ஊரைவிட்டு, புதிய ஊருக்கு இடம்பெயர்ந்ததின் அடிப்படையான காரியம் பொருளாதரம் அல்ல, மாறாக, அவர்கள் பிள்ளைகளில் ஒருவனின் தவறான நடத்தையாகவே இருந்தது. இந்த சம்பவத்தின் கருப்பொருளாவது, பூமியை கர்த்தர் குடியிருப்புக்கு ஏற்படுத்தினார். எனவே, மனிதர்கள் இடம்விட்டு இடம் மாறுவது அவர்களின் சொந்த தீர்மானம், ஆனால், மனமாற்றம் வழியாக வாழ்க்கை முறை மாறாமல், மற்றவர்களின் குறைகளைப்பற்றி பேசிக் கொண்டிருப்பதால், மனிதர்களின் வாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் ஏற்படப்போதில்லை. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படிக்கு தேவனானவர் சபையை ஏற்படுத்தனார். எனவே, ஒரு விசுவாசியானவன் எங்கே தேவனை ஆராதிக்கச் செல்கின்றான் என்பது அவனுடைய தீர்மானம். அவன் சத்தியத்தை சுத்தமாக போதிக்கும் ஒரு சபைக்குச் சென்றாலும், தன் வாழ்விலிருக்கும் பழைய காரியங்களைவிட்டு மனந்திருப்ப மனதில்லாதிருப்பானாகில், அவன் எங்கு சென்றாலும், அதனால் அவனுக்கு உண்டாகும் பலன் அற்பமானமாகவே இருக்கும். பிரியமானவர்களே, பொதுவாக வாழ்வில் ஏற்படும் புதிய மாற்றங்கள், கொஞ்சக் காலம் மனதில் புத்துணர்ச்சியைத் தரும். அந்த நாட்களை, நாம் நம்முடைய பழைய சுபாவங்களைவ விட்டு மனம்திரும்பி, கிறிஸ்து இயேசுவின் திவ்விய சுபாவங்களில் வளரும்படிக்காக, நம் வாழ்க்கைமுறையானது மாறும்படிக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**நீதிமொழிகள் 28:13**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, நீர் மனந்திரும்பும் பாவியை மன்னிக்கின்றவர் என்பதை அறிந்த நான் என் பாவங்களை மறைக்க துணியாமல், உம்மிடம் அறிக்கைபண்ணி வாழ்வடைய கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழியாதவைகளை நாடுங்கள்

ஒரு தகப்பனானவர் முதிர்வயதாகி மரிக்கும் தறுவாயில், தான் குடியிருந்த காணியை இரண்டாக பிரித்து, தன் இரண்டு குமாரர்களுக்கு கொடுத்தான். தகப்பனானவருடைய இறுதிக் கிரியைககள் முடிந்த பின்பு, காணியை இரண்டாக பிரித்து எல்லை போடுவதற்குரிய ஆய த்தங்கள் செய்த போது, எல்லையின் அருகே ஒரு நல்ல சுவையான கனிகளை கொடுக்கும் பலா மரம் இருந்தது. அந்த பலா மரமானது, யாருடைய காணியின் பங்குக்குள் இருக்க வேண்டும் என்று மூத்தவனு க்கும் இளையவனுக்குமிடையில் வாக் குவாதம் உண்டாயிற்று. அந்த வாக்கு வாதம் இரண்டு சகோதரருக்கிடையில் பிரிவினையை உண்டாக்கியதால், அந்த வழக்கை அவர்கள் நீதிமன்ற த்திற்கு கொண்டு சென்றார்கள். அந்த ஊரிலுள்ள முதியவரொருவர், தம்பி மாரே, நான் உங்கள் தகப்பனானவருடைய நண்பன், இந்த அற்பமான பலா மரத்திற்காக நீங்கள் இரண்டு பேரும் சண்டை செய்வதென்ன? அது பிரச்சனையாக இருந்தால், தறித்துப் போடுங்கள். உங்கள் ஐக்கியம் அந்த பலா மரத்திலும் அதிக முக்கியமல்லவா என்று அறி வுரை கூறினார். ஆனாலும், அவர்களோ, முடிவு காணும்வரை விட மாட்டோம் என்று மிகவும் வைராக்கியமுடையவர்களாக இருந்தார்கள். இந்த உலகிலே மனிதர்கள் அற்பமான காரியங்களைக்கூட தங்கள் பொக்கிஷமாக கருதி, அவைகளை தம் வசப்படுத்த, வாதுக்கும் வழக்கி ற்கும் செல்கின்றார்கள். சில விசுவாச மார்க்கத்தாரும் இதற்கு விதிவில க்கானவர்கள் அல்ல. அவர்கள் பெற்றுக் கொண்ட விலைமதி க்க முடி யாத இரட்சிப்பை அற்பமான காரியங்களுக்காக இழந்து போவதற்கு ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். “உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக் கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ” என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, அற்பமான இந்த உலகத்தின் காரியங்களை குறித்து தர்க்கித்து, அவைகளை உங்கள் வசப்படுத்திக் கொள்வதற்காக மேன்மையா வைகளை இழந்து போகாமல், மேன்மையானதை பற்றிக்கொள்வத ற்காக, அதிசீக்கிரத்தில் அழிந்து போகின்ற அற்பமானவைகளை விட் டுவிடுங்கள்.

**மத்தேயு 5:40**

**உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றி ருக்கிறவனுக்கு உன் அங் கியையும் விட்டுவிடு.**

**ஜெபம்**: உன்னதத்தில் வாசம் செய்யும் பரிசுத்தரே, அதிசீக்கிரத்தில் அழிந்து போகும் அற்பமானவைகளுக்காக, பரலோக மேன்மைகளை இழ ந்து விடாதபடிக்கு, ஞானமுள்ள இருயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – யோவான் 14:1 – 3

# மிகவும் அதிகமான நித்திய கனமகிமை

ஒரு நாள், சில காரணங்களுக்காக குழப்பமடைந்த விசுவாசியானவனொருவன், சபையின் மேய்பரானவரிடத்திற்கு சென்று, இன்னாரால் தனக்கு செய்த அநியாயத்திற்கு "இன்று, இப்போது, இக்ஷணமே நீதி செய்யப்பட வேண்டும்" என்று கடினமாக பேசினான். அந்த விசுவாசியானவன், மனமுடைந்திருப்பதையும், மிகவும் கோபமடைந்திருப்பதையும் அவதானித்த மேய்பரானவர் அவன் தன் மனதிலுள்ளவைகளை கூறி முடிக்கும்வரை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். அவன் யாவையும் பேசி முடிந்த பின்னர், மேய்பரானவர் அவரை நோக்கி: இப்பொழுது நான் பேசுவதற்கு இடம் கொடு என்று கூறி, மகனே, உன் உடன் சகோதரன் உனக்கு கொடுக்க வேண்டிய பணத்தில் உனக்கு அநியாயம் செய்தது உண்மை என்பதை நான் அறிவேன். இதை கைளாளுவதற்கு மூன்று தெரிவிகள் உனக்கு உண்டு. முதலாவது: நீ பொலிசாரிடம் சென்று, அவனுக்கெதிராக முறையீடு செய்து, வழக்கை தாக்குதல் செய்யலாம். இரண்டாவது: நீ அவனிடம் சென்று அவனை பழவந்தம் பண்ணி மிரட்டல்கள் வழியாக, உன் பணத்தை பெற்றுக் கொள்ளலாம். மூன்றாவது: நரக அக்கினிக்கென்று நியமிக்கப்பட்டிருந்த நம்மை, தேவனானவர்தாமே, மன்னித்தது போல, அழிகின்ற ஐசுவரியத்தை அநியாயமாக பற்றிக் கொண்டிருக்கும் உன் உடன் சகோதரனை மன்னித்து விடலாம். இந்த மூன்று தெரிவுகளில் எதை செய்தாலும், இந்த உலகம் உன்னை பெரிதாக குற்றப்படுத்தப் போவதில்லை. ஆனால், இவற்றில் நமக்கு எது தகுதியாயிருக்கும் என்று அவனிடம் கேட்டார். அதற்கு அவன்: இந்த வேதனையை தாங்க முடிவில்லை ஐயா, என்று அவன் கண்ணீரோடு பதில் கூறினான். மகனே, நாம் நீதிமானாக இருக்கும் போதல்ல, பாவிகளாக இருந்த போது, ஆண்டவராகிய இயேசுதாமே, நம்மீது அன்புகூர்ந்து தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்தார். அவரை அறிந்த பின்னரும், எத்தனை தவறுகளை நாம் செய்திருப்போம். அவர் இன்று, இப்போது, இக்ஷ ணமே நீதியை சரிக்கட்டினால், நாம் யாவரும் நிர்மூலமாகியிருப்போம். இந்த உலகத்திலுள்ளவைகள் உன்னிடமிருந்து ஒருவன் பறித்துக் கொண்டால், அதை மன்னித்து விட்டுவிடு. அப்போது பரலோகத்திலே நீ அழியாக பொகிஷத்தை சேர்கின்றவனாக இருப்பாய் என்று அறிவுரை கூறினார்.

**2 கொரிந்தியர் 4:17**

**அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, நான் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகாமலும்,கலக்கமடைந்தும்மனமுறிவடையாமலும்,பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு இலக்கை நோக்கி பொறுமையோடு ஓட பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழியாத முதலீடுகள்

அழிவுள்ளவைகள் யாவும் ஒரு நாள் அழிந்து போகும். அவைகளை எவ்வளவாய் ஒரு மனிதன் பெருக்கினாலும், அவைகள் ஒன்றும் நிலை நிற்பதில்லை. நாம் காண்கின்ற இந்த உலகமானது வளர்ந்து அபிவிருத்தி அடைந்து கொண்டு போகின்றது என்று மனிதர்கள் கருதுகின்றார்கள். அவர்களுடைய வரைவிலக்கணப்படி உலகமானது அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கின்றது. ஆனால், வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் அக்கினிக்கிரையாக வைகப்பட்டிருக்கின்றது. கொஞ்சமாக சேர்த்தவன், சேர்த்த கொஞ்சத்தையும், அதிகமாக சேர்த்தவன், தான் சேர்த்த அதிகத்தையும் இழந்து போவான். அதிகமாய் சேர்த்து, தன் இருதயத்தை சேர்த்தவைகளின் மேல் வைத்திருக்கின்றவன் அதிகமாய் இழந்து போவதினாலே, அதிக வேதனை அடைவான். இன்று விசுவாசமார்க்கத்தார் என்று கூறிக் கொள்ளும் சிலரும், தேவனுடைய ஆசீர்வாதம் என்ற போர்வையிலே, இந்த உலகத்தின் பொருட்களை அதிகதிகமாய் பெருக்கிக் கொண்டு போகின்றார்கள். உங்களிடம் இருப்பதைவிற்றுபிச்சை கொடுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு சொன்ன வார்த்தைகளுக்கு நவீன விளக்கங்களை கொடுத்து, உலக பொருட்களை தங்களுடைய சந்ததிக்காக சேர்த்து வைத்துக் கொண்டு, ஏழைகளுக்கு உதவுங்கள், எளியர்களுக்கு பெலனாயிருங்கள் என்று மற்றவர்களுக்கு உபதேசித்து. மற்றவர்களுடைய பொருட்களை சேர்த்து, ஏழை எளியவர்களுக்க உதவி செய்து, தங்கள் பெயர்களை மேன்மைப் படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள் என்றுசொன்ன ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகள் மாறாதவைகள். ஆனாலும், அவை யாவும் நம்முடைய தெரிவிலும், தீர்மானத்திலுமே தங்கியுள்ளது. ஒருவன் தன்னை ஆசீர்வதிக்கப்பட்டவன் என் கூறி சுகபோகமாக வாழ்ந்து, தன் சரீரத்தை நன்றாக பேணிக் பாதுகாத்துவந்தாலும், தேவன் முன்குறித்த நாளிலே, அவன் ஆவி பிரியும், அவன் சரீரம் மண்ணுக்கு திரும்பும். அவன் சேர்த்து வைத்தவைகள் அழிந்து போகும். உயிரோடிருக்கும் நாட்களில் ஞானமுள்ள அழியாத முதலீடுகளை செய்யவும், இந்த பூமியிலே வாழும் நாட்களிலே உண்ணவும் உடுக்கவும் இருந்தால் போதும் என்கின்ற சிந்தை உங்களில் வளர்ந்து பெரு இடங் கொடுங்கள்.

**மத்தேயு 6:21**

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்**

**ஜெபம்**: பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; என்று சொன்ன தேவனே, இந்த பூமியின் நிலையற்ற பொருட்களில் என் கண்களை பதிய வைக்காமல் வாழ ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# “தாங்கள் வெட்டின குழி”

கிராமப் புரத்திலுள்ள பாழடைந்த வீடொன்று கைவிடப்பட்ட நிலையிலே இருந்தது. அதற்குள் நுழைய வேண்டாம் என்றும், ஆபத்து நேரிடும் என்றும் அங்கே பெரிதான எழுத்தில் எச்சரிப்பு பலகையொன்றும் போட ப்பட்டிருந்தது. ஆனாலும், அதை யாவற்றையும் மீறி, சில வாலிபர்கள், அந்த வீட்டிற்றிற்குள் எல்லை வழியாக பாய்ந்து உள்ளே சென்றார்கள். அவர்கள் முன் கதவை தள்ளிக் கொண்டு உள்ளே சென்றபோது, கூரையின் ஒருபகுதி அவர்கள் மேலேவிழுந்ததால், அவர்கள் வெ குவாய் காயமடைந்ததினால், மரு த்துவமனைக்கு எடுத்துச் செல்ல ப்பட்டு, அவர்கள் உயிரை காக் கும்படிக்கு, வைத்தியர்கள் உடன டியாக சத்திர சிகிச்சை செய்தார் கள். பாருங்கள், இவர்கள் தங்களுக்கு முன்பாக கண்ணியிருப்பதைக் கண்டும், தங்களுக்கு தாங்களே தீங்கு வரும்படிக்கு, அந்த கண்ணிக் குள் தங்களை அகப்படுத்திக் கொண்டார்கள். “எவ்வகையான பட்சியா னாலும்சரி, அதின் கண்களுக்கு முன்பாக வலையை விரிப்பது விருதா.” என்று நீதிமொழிகளின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். ஏனெனில், பட்சி களுக்கு மனிதனுக்கிருக்கும் பகுத்தறிவு போன்ற அறிவு இல்லாவிடி னும், அவைகளை சிருஷ்டித்தவர், அவைகளுக்கு கொடுத்த உணர்வின் படி, தங்கள் உயிருக்கு ஆபத்து வந்திருக்கின்றது என்று கண்டு, அவை கள் அந்த இடத்தைவிட்டு சென்றிவிடும். ஆனால், மனிதர்களோ, தங் கள் இரத்தத்திற்கே பதிவிருக்கிறார்கள், தங்கள் பிராணனை அழிக்கும் படிக்கு பதிங்கி ஒளித்திருக்கின்றார்கள். (நீதிமொழிகள் 1:17-19). மேற்கு றிப்பிட்ட சம்பவத்திலே, அந்த வாலிபர்கள், தங்கள் வாலிபத்தின் அறியாமையிலே, வீரதீர செயல்களை செய்ய முற்பட்டார்கள் என்று அந்த கிராமத்தார், அவர்களின் அறியாமையை ஒருவேளை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், தேவனாகிய கர்த்தர் பல முறை கூறியும், அநேக ஆண்டுகள் நல்ஆலோசனைகளை வழங்கியம், எத்தனையோ முறை எச்சரிப்பை கொடுத்தும், ஒரு விசுவாசியானவன், பொருளாசை, விபச்சாரம், மதுபானம், கசப்பு, வைராக்கியம், பகை போன்ற மாசம்ச இச்சைகளுக்கு தன்னைத் தான் ஒப்புக் கொடுப்பானாகில், அவனுடைய முடிவு என்னவாயிருக்கும்? பிரியமானவர்களே, கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நடவுங்கள். கண்ணிகளில் சிக்காதபடிக்கு அவர் உங்களுக்கு தேவ ஞானத்தை தந்தருள்வார்.

**நீதிமொழிகள் 1:33**

**எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்**

**ஜெபம்**: புத்திமானாய் நடந்து கொள்ள ஞானத்தை அருளும் தேவனே, நான் உம்முடைய அறிவை வெறுக்காமல் பற்றிக் கொள்ளும்படிக்கு, உமக்கு பயப்படும் பயம் என்னிடத்தில் எப்போது இருப்பதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆடி 14

மாலை வாசகம் - 1 யோவான் 2:15-17

# மேலே உயர்த்தி கீழே தள்ளும்

ஒரு பூங்காவின் அருகிலுள்ள சிறிய மேட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், தள்ளு வண்டியிலே ஒருவனை ஏற்றி, மற்றவர்கள் மேட்டின் உச்சிவரைக்கும் அவனைத் தள்ளி, பின்னர், மேலிருந்து கீழே வேகமாக வர விட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வழியாக சென்று கொண்டிருந்த வயது முதிர்ந்த ஐயா ஒருவர், அவர்களை நோக்கி: தம்பிமாரே, நீங்கள் உங்களை காயப்படுத்திக் கொள்ளாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் தவறுதலாக மேட்டின் மறுபக்கம் சென்றுவிட்டால், வண்டில் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்காது. அந்தப் பக்கம், அதிக பள்ளமாக இருகின்றது. அங்கே பாறைக் கற்றகளும், முற்பற்றைகளும் அதிகமாகயிருக்கின்றது என்று அறிவுரை கூறினார். வயதானவரின் தோற்றமும், அவரின் பெலவீனமுள்ள குரலும், அங்குள்ள சிறுவர்களுக்கு நகைப்புக்குரியதாக இருந்ததேயல்லாமல், அவரின் அறிவுரையையோ அவர்கள் அற்பமாக எண்ணினார்கள். சற்று நேரம் கழிந்ததும், அவர் கூறிய பிரகாரமாகவே, அவர்கள் தள்ளிய வண்டிலானது, அதிலிருந்த சிறுனொருவனோடு, மேட்டின் மற்றப்பக்கமாக சென்றது. வண்டிலில் இருந்தவனுக்கோ அல்லது அதை தள்ளினவர்களுக்கோ அதை கட்டுப்படுத்த முடியாதபடிக்கு, அதி வேகமாக உருண்டோடி கீழேயுள்ள பறையொன்றிலே மோதிக் கொண்டது. பிரியமான சகோதர சகோதரிகளே, பண ஆசையானது எல்லாத் தீமைக்கும் வேர் என்ற அறிவுரை எத்தனை முறை கேட்டிருக்கின்றீர்கள்? இந்த உலகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்காதிருங்கள் என்ற ஆலோசனையை எத்தனை முறை வாசித்திருக்கின்றீர்கள்? பொருளாசையானது ஒருவனை மேட்டில் ஏறும்படி உந்துதல் செய்யும். அவன் மேட்டில் ஏறும் போது, நான் மேல் நோக்கி உயர்ந்து கொண்டிருக்கின்றேன் என்று பெருமிதமடைவான். அவன் மேட்டின் உச்சியில் சென்ற பின்பு, கட்டுப்படுத்த முடியால், மறுபடிக்கம் உருண்டோடிய வண்டிலைப் போல, அவனை மேலிருந்து கீழே விழத்தள்ளும். தனக்கு தானே குழிவெட்டும் மனிதனைப் போல, பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் அப்படியே இருக்கும். அது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும். அதாவது, உலக முழுவதையும் ஆதாயப்படுத்தி, தன் ஆத்துமாவை கெடுத்துப் போடும்.

**நீதிமொழிகள் 1:19**

**பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே; இது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, அழிந்து போகும் இந்த உலகத்திலுள்ள செல்வங்களை நான் நாடித் தேடாமல், நித்தி சமாதானத்தை தரும் பரலோகத்துக்குரியவைகளை நாடித் தேட பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனதில் தோன்றும் ஆசைகள்

மனிதர்களின் வாழ்வில் தங்கள் மனதின் ஆசைகள் நிறைவேறும் போது பெருமகிழ்ச்சியடைகின்றார்கள். அதனால் தாங்கள் போகும் வழி சரியானது எனவும், தாங்கள் செய்யும் காரியங்கள் சிறப்பானவைகள் எனவும் கருதி, அவ்வழியிலே சென்றுவிடுகின்றார்கள். ஒரு சிலர் அதை தேவனுடைய ஆசீர்வாதம் என சொல்லி தேவனைத் துதிக்கின்றார்கள். தங்கள் வழி வெற்றி தரும் வழி என்ற சொல்லி, இன்னும் பலரை தங்கள் வழிக்கு இழுத்துக் கொள்கின்றார்கள். ஆனால் எந்த மனிதனும், தன் மனதின் ஆசைகள் இந்த உலகத்தை சார்ந்தவைகலா அல்லது பரலோகத்தை சார்ந்தவைகளா என்பதை வகுத்து அறிந்து கொள்வது அவனுடைய ஆத்துமாவிற்கு நல்லது. இன்று விசுவாச மார்கத்திலுள்ள சிலரில், உலகத்தை சார்ந்த மனதின் ஆசைகள் மாம்ச இச்சைகளாக இருக்கின்றது என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." *(1 யோவான் 2:16-17)*. மேலும், "நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்." *(1 யோவன் 2:19)*. ஆண்டவராகிய இயேசுவை அறியாத நாட்களிலே வாழ்விலே பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலே, வாழ்ந்து வந்தவர்கள், ஆண்டவர் இயேசுவை அறிந்த பின்பு, தங்கள் வாழ்வில் வரும் அழைப்புக்கள், உயர்வுகள், வசதிகள், புதிய உறவுகள், செல்வாக்குகள் யாவும், ஆண்டவர் இயேசுவினால் உண்டானவைகள் என்று கருதி விடுகின்றார்கள். பிரியமானவர்களே, இன்று சிலர், இந்த உலகத்தினாலுண்டான சில காரியங்களை தீங்கற்ற ஆசைகள் என்று சொல்லிக் கொண்டு, அவற்றை தங்கள் வாழ்விலே சேர்த்துக் கொள்கின்றார்கள். மனுஷனுக்கு செம்மையாக தோன்றும் வழிகள் எல்லாம் ஜீவ வழிகள் அல்ல. பெற்றுக் கொண்ட மேலான அழைப்பை மறந்து போய்விடாதிருங்கள். மனதின் ஆசைகளை தேவ வார்த்தையின் வெளிச்சத் திலே ஆராய்ந்து அறிந்து, பரலோகத்திற்குரியவைகளை பற்றிக் கொள்ளுங்கள்.

**ஏசாயா 55:8**

**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**ஜெபம்:** வாழ்வு தரும் ஜீவ வசனத்தை எனக்குத் தந்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டானவைகளை நான் ஒருபோதும் பின்பற்றி, வஞ்சிக்கப்பட்டு போய்விடாதபடிக்கு என்னை உம் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அளவுகோல்

நாங்கள் செல்லும் பாதை செம்மையானதோ என்பதை, எத்தனை பேர்கள் நாங்கள் செல்லும் வழியால் செல்கின்றார்கள் என்பதினாலோ அல்லது எத்தனை பேர்கள் செல்லும் வழியாக நாங்கள் செல்கின்றோம் என்பதினாலோ நிர்ணயிக்கப்படுவதில்லை. ஒரு குடும்பத்திலே கணவன் மனைவிக்கு பத்து பிள்ளைகள் இருந்தார்கள். ஆனால், அந்தக் குடு ம்பத்தில் எப்போதும் சத்தமும், சந்தடியும், சண்டையும், குழப்பமு மாக இருந்தது. அவர்கள் எங்கு சென்றாலும் சமாதானத்தை குழப் புகின்றவர்களாகவே இருந்தார் கள். அவர்கள் வீட்டிற்கு எதிர்புறமாக வாழ்ந்து வந்த கணவன் மனை விக்கு பிள்ளைகள் இல்லாத்திருந்தது. ஆனாலும், அவர்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்கின்றவர்களாகவும், நன்மை செய்கின்றவர்களா கவும், போகுமிடமெல்லாம் சமாதானத்திற்கேதுவானவைகளை பேசுகின் றவர்களாகவும், செய்கின்றவர்களாவும் இருந்தார்கள். "சண்டையோடு கூடிய வீடுநிறைந்த கொழுமையான பதார்த்தங்களைப் பார்க்கிலும், அமரிக்கையோடே சாப்பிடும் வெறும் துணிக்கையே நலம்." எனவே ஒரு விசுவாசியானவன் பெருங்கூட்டத்தை பின்பற்றுவதாலோ, அல்லது பெரு ங்கூட்டம் ஒரு ஊழியனை பின்பற்றுவதாலோ அவர்கள் செல்லும் வழி நிறைவானது என்று கூறிவிட முடியாது. ஆண்டவராகிய இயேசு வை பின்பற்றி செல்கின்ற தேவ சித்தத்தை செய்கின்ற அவருடைய ஊழிய ர்களும், அவர்மேல் நம்பிக்கை வைத்து அவரை பின்பற்றி செல்கின்ற விசுவாச மார்க்கத்தாரும் வாழ்வுக்கு செல்லும் வழியிலே நடக்கின்ற வர்களாகவும், பாக்கியம் பெற்ற ஜனங்களாவும் இருக்கின்றார்கள். இன்று சிலர் தங்களுக்கென்று சில அளவுகோல்களை வைத்து, வாழ் வுக்கு செல்லும் பாதை எது என்பதை நிச்சியிக்கின்றார்கள். "இடுக்க மான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கி றவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே இந்த உலகத் திலுள்ள அளவு கோலால் பரலோகத்திற்குரியவைகளை அளவிடாமல், பரலோகத்திற்குரியவைகளால் இந்து உலகத்திற்குரியவைகளை நிதா னித்து அறியுங்கள். சத்திய ஆவியானவர்தாமே சகல சத்தியத்திலும் உங்களை நடத்திச் செல்வாராக.

**1 கொரிந்தியர் 2:15**

**ஆவிக்குரியவன் எல்லாவற் றையும் ஆராய்ந்து நிதானிக் கிறான்;**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உல கத்திலுள்ளவைகளால் பரலோகத்திற்குரியவைகளை தீர்மானம் செய்யா மல், உம்முடைய வார்த்தையின்படி வாழ எனக்கு ஞானத்தை தந்து நடத் திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிஜமானவைகளும் போலியானவைகளும்

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு குறிப்பிட்ட தேசத்திலே சில மனிதர்கள் ஒன்றிணைந்து, போலியான நாணயங்களை அச்சிட்டுள்ளார்கள் என்ற செய்தியை அறிந்து கொண்ட, தேசத்தின அதிகாரிகள், போலியானவைகளை எப்படி கண்டு பிடிப்பதென்றும், நிஜமானதிற்கும் போலியானதிற்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன என்பதைக் குறித்து, ஜனங்களுக்கு விரிவான விளங்கங்களை கொடுத்திருந்தார்கள். அரச அதிகாரியகள்நிஜமானதைக் குறித்து வெளிப்படைய பேசுவதற்கு தயக்கமடையவில்லை. ஆனால், போலியான நாணயங்களை அச்சிட்டவர்கள் வெளிப்படையாக வந்து, இதை நாங்கள் அச்சிட்டோம், விருப்பமென்றால் நீங்கள் இதை உபயோகிக்கலாம் என்று கூறுவதில்லை. மாறாக, ஜனங்களை வஞ்சிக்கும்படிக்கு, அவர்கள் போலியாவைகளை நிஜமான நாணயங்களோடு கலந்து விடும்படிக்கான நடவடிக்கைகளை செய்து விடுவார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே தம்மிடத்தில் வரும்படி யாவரையும் அழைக்கின்றார். அவர் மட்டுமல்ல, பிசாசாவனும் தன்னிடத்தில் வரும்படி யாவரையம் அழைக்கின்றான். ஆண்டவராகிய இயேசு அழைக்கும் போது, நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கின்றார். ஆனால், பிசாசானவனோ, நான் கொல்லவும் அழிக்கவும் ஜனங்களை அழைக்கின்றான், ஆனால் அவன் நான் கொல்லவும் அழிக்கவும் உங்களை அழைக்கின்றேன் என்று கூறுவதில்லை. அவன் நன்மை செய்கின்றவனைப் போல போலியான வேடம்பூண்டு ஜனங்களை அழிவுக்காக அழைக்கின்றான். எனவே, திறந்த வசால்களையும், விசாலமான கதவுகளையும் கண்டு உடனடியாக உள்ளே நுழையாதிருங்கள். இன்று சிலர், நீங்கள் எப்படியும், உடுத்தலாம், எப்படியும் இருக்கலாம், எதையும் குடிக்கலாம், நீங்கள் விரும்பியதைப் பார்கக்லாம், உங்கள் ஆசைப்படி எங்கும் போகலாம் என்ற உபதேசத்தோடு அழைப்பு விடுக்கின்றார்கள். ஆண்டவர் இயேசு எல்லாரையும் நேசிக்கின்றார் என்ற கூற்றை அவர்கள் கூறிக் கொள்கின்றார்கள். ஆண்டவர் இயேசு எல்லாரையும் நேசிக்கின்றார் என்பது உண்மை, ஆனால், நீங்கள் என்னிடத்தில் வந்த பின்பு நீங்கள் விரும்பிய பிரகாரமாக வாழ்ந்து விடலாம் என்று ஆண்டவர் இயேசு ஒருபோதும் கூறியதில்லை. மாறாக, "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." என்று கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 24:11**

**அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.**

**ஜெபம்:** நீதியின் தேவனே, இந்த உலகத்திலுள்ள போலியான வழிகளை நான் பின்பற்றி வஞ்சிக்கப்பட்டு போய்விடாதபடிக்கு, எப்போதும் உம்முடையவார்த்தையில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புதுவாழ்விற்கான அழைப்பு

தேவனாகிய கர்த்தாமே ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதையே விரும்புகின்றார். நான் துன்மார்க்க னுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைத்திருக்கி ன்றார் (*எசேக்கியேல் 33:11*). எனவே ஒருவன் நீங்கள் எப்படியும், உடு த்தலாம், எப்படியும் வாழலாம், எதை யும் குடிக்கலாம், மனம் விரும்பிய தைப் பார்க்கலாம், உங்கள் ஆசை ப்படி எங்கும் போகலாம் என்ற தவ றாக உபதேசத்தோடு அழைப்பு விடு க்கின்றார்கள். அப்படியல்ல, மாறாக நீங்கள் எப்படியும் உடுத்தியிருக்க லாம். கண்போன போக்கில் வாழ்ந் திருக்கலாம், விரும்பியதெல்லாம் குடித்து, கண்களுக்கு இன்பமான தை பார்த்திருக்கலாம், மனஆசை ப்படி உல்லாசமாக எங்கும் சென்று வந்திருக்கலாம் அவை உங்கள் வாழ்வின் முடிவாக இருக்க வேண்டி யதில்லை. உங்கள் சொந்த பாதைகளையும், செம்மையாக தோன்றும் வழிகளையும் விட்டுத் திரும்பும்படிக்கு தேவனாகிய கர்த்தர்தாமே யாவரையும் அழைக்கின்றார். தங்கள் கண்போன வழியிலே வாழ்ந்து தங்கள் அருமையான நாட்களை வீணாக்கிய பலர், தேவ கிருபையிலே விசுவாசத்தை கொண்டு இரட்சிப்பை அடைந்து, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு காத்துக் கொள்கின்றார்கள். ஆனால், தேவனை ஆண் டாண்டு காலம் அறிந்தவர்களில் சிலர், தங்கள் மனதின் ஆசைகளின்படி வாழ வேண்டும் என்பதற்காக, தேவன் வெளிதோற்றத்தையல்ல, இருத யத்தைப் பார்கின்றார் என்று விதண்டாவாதம் செய்து, தங்கள் தங்கள் மனதிற்கு சரியாக தோன்றும் நாகரீகமான நடை, உடை, பாவனை களை தெரிந்து கொள்கின்றார்கள். அது தேவனுடைய நியமனம் அல் லவே, மாறாக அது அவர்களுடைய சொந்த தீர்மானம். இப்படியாக அநேகர் தங்கள் சொந்த விரும்பங்களின்படி தங்களுக்கென்று வழி களை தெரிந்து கொண்டாலும், நீங்கள் குழப்பமடையாமல், கற்றுக் கொண்டவைகளிலே உறுதியாய் நிலைத்திருந்து, தேவனுடைய சித்த த்தை உங்கள் வாழ் வில் நிறைவேற்றுங்கள்.

**I யோவான் 2:16**

**ஏனெனில், மாம்சத்தின் இச் சையும், கண்களின் இச்சை யும், ஜீவனத்தின் பெருமை யுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினா லுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலு ண்டானவைகள்.**

**ஜெபம்:** புதுவாழ்வு வாழ்வதற்காக என்னை அழைத்த தேவனே, இனி நான் என் மாம்சத்தின் விருப்பங்களை நிறைவேற்றாமல், தேவ சித்த த்தை நிறைவேற்றும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்து வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயத்தில் விழும் விதைகள்

தெரு வழியாக சென்று கொண்டிருந்த வாலிபர்கள், ஒரு வீட்டின் பிற்பு றமாக இருந்த பின் வளவிலே, ஒரு மாங்கனியின் விதையை எறிந்து விட்டு சென்று விட்டார்கள். நாட்கள் சென்ற பின்பு அந்த விதையானது முளைத்து தளிர்விட ஆரம்பித்தது. அந்த வீட்டின் சொந்தக்காரனோ, மற்றய மரங்களோடு அதுவும் வளரடும் என்று விட்டுவிட்டான். ஆண் டுகள் கடந்து சென்று, அந்த மரமா னது வளர்ந்து கனிகளை கொடுத் தது. அவ்வழியாக செல்லும் மனி தர்கள் பார்த்து ஆச்சரியப்படத்தக் கதாக அந்த மரத்தின் கனிகளை பறித்து புசித்த யாவரும், இந்தக் கனியானது சுவை யற்றும், மிகவும் புளிப்புள்ளதாகவும் இருக்கின்றதே என்று வெறுப்போடு, அதை எறிந்து விட்டு, சென்றார்கள். அந்த மரத்தின் கனியை மனிதர்கள் சுவை பார் ப்ப தற்கு முன்னதாக, மரத்தின் தன்மைகள் யாவும் நன் றாகவே காட்சியளி த்தது. ஆனால், அந்த மரத்தின் கனியின் சுவையோ, இதுவரைக்கும் மனிதர்கள் அறியாதிருந்தபடிக்கு உள்ளே மறைந்திருந்த அந்த மரத்தின் உண்மையான தன்மையை வெளிக்காட்டியது. இன்று பலர் கர்த்தர் வெளிதோற்றத்தையல்ல, இருதயத்தைப் பார்கின்றார் என்று கூறிக் கொள்கின்றார்கள். அது உண்மையான கூற்று. அவ்வ ண்ணமாக கூறுகி ன்றவர்களின் கனிகள் சந்தைக்கு வரும் போது, அந்தக் கனிகளானது, அவர்கள் இருதயத்தில் என்ன இருந்தது என்பதை மனிதர்க ளுக்கு வெளிக்காட்டிவிடும். தேவனுக்கு மறைவான காரியம் ஒன்றுமி ல்லை. ஆனால், தங்கள் வெளித்தோற்றங்களை நியாயப்படுத்தி, நீதி மான்க ளைப் போல தங்களை காண்பித்து வருகின்றவர்களின் வாழ்க் கையா னது உண்மையாதோ அல்லது போலியானதோ என்பதை அவர் களின் வாழ்வில் வெளிப்படும் கனிகளால் உறுதிப்படுத்தப்படும். ஆண்டு கள் கடந்து செல்லலாம் ஆனால் தேவனின் வார்த்தையோ மாறாத வைகள். எனவே, தேவன் இருதயத்தைப் பார்கின்றார் என்று சொல் லுகின்ற எந்த மனிதனும், தன் இருதயத்தில் மறைந்திருப்பது என்ன என்பதைக் குறித்து மிகவும் எச்சரிக்கையுள்ளவனாக இருக்க வேண்டும். இருதய த்திலே நல்ல விதைகளான தேவ வார்த்தையானது விழுந்து முளைக் கட்டும். நாம் ஆவிக்கொன்று விதைத்து ஆவியினாலே நித்திய ஜீவனை அறுவடை செய்வோமாக.

**கலாத்தியர் 6:8**

**தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தி னால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிற வன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, வாழ்வு தரும் வார்த்தைகள் என் உள்ளதில் விழுந்து முளைப்பதற்கு நான் இடங் கொடுக்கும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# “நயங்காட்டுதல்”

ஒரு பெற்றோரானவர், தங்களுடைய மகனானவனுக்கு சின்ன வயதிலிருந்து தேவ ஆலோசனைகளை கூறி, அவன்மேல் அன்புகூர்ந்து, அவனை தேவ பயத்தோடும், கருத்தோடும் வளர்த்து வந்தார்கள். வாலிப பிரயாத்தை அடைந்த அந்த மகனானவன், மேற்படிப்பை முடித்து, நல்ல உத்தியோகத்திலே அமர்ந்து கொண்டான். அவன் தன் தாய் தந்தையரை மதித்து, அவர்கள் மேல் நேசமாய் இருந்த போதிலும், பாடசாலையிலும், வேலையிலும் அவன் சேர்த்துக் கொண்ட அவனுடைய சக மாணவர்கள், மற்றும் சக ஊழியர்களின் வாழ்வின் நோக்கங்களையும் கருத்துக்களையும் கேட்க ஆரம்பித்தான். அவற்றுள் பல அவனுக்கு புதிய நோக்குகளை கொண்டதும், மனதிற்கு ஏற்புடையதாகவும் இருந்தது. அவை தன் பெற்றோர் கூறிய ஆலோசனைகளுக்கு முரண்பட்டதாக இருந்த போதிலும், தன் பெற்றோர், நவீன உலகின் நாகரீகங்களையும், புதுப் பாணிகளையும் கற்று அறியாதவர்கள் என்று தனக்குள் கூறிக் கொண்டு, அவற்றுள் சிலவற்றை அவன் கைக்கொள்ள ஆரம்பித்தான். அவை அவனுக்கு நலமானதாகவே தோன்றிற்று. பல ஆண்டுகள் சென்று வாழ்வின் கருப்பொருளை அறியும் அறிவிலே வளர்ந்த போது, அவன் தன் பெற்றோரின் ஆலோசனைகளை அற்பமாக எண்ணியத்தைக் குறித்து மனவருந்தினான். பெற்றோரானவர்கள் இந்தஉலகத்தைவிட்டு கடந்து சென்றதால், தன் அறியாமையை குறித்து மன்னிப்பு கேட்ட வழி இல்லை என்று மிகவும் மனவேதனை அடைந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவ ஆலோசனைக்கு எதிரான நல்ல ஆலோசனைகள் எதுவுமே இல்லை. இந்த உலகிலே வாழும் நாட்களிலே, கல்வி நிலையங்களில், வேலை இடங்களில், நண்பர்கள் உறவினர் மத்தியிலிருந்து அள்ளித் தூவப்படும் எல்லா விதைகளையும் நல்ல நிலமாகிய உங்கள் இருதயத்திலே விழுந்து வளர்வதற்கு விட்டுவிடாதிருங்கள். இந்நாட்களிலே, ஆண்டவர் இயேசு வழியாக இரட்சிப்பை அடையாத மனிதர்கள், நீ எங்களுடன் வா, நாங்கள் போய் பாவம் செய்வோம் என்று ஒருவரையும் அழைப்பதில்லை. மாறாக எங்களோடு வா இந்த உலகில் பணத்தை எப்படி பெருக்கலாம் என்று உனக்கு கற்றுத் தருவோம் என்று நயங்காட்டி அழைப்பார்கள். பாவிகள் செல்லும் வழியின் முடிவு என்ன என்பதை ஆராந்து அறிந்து கொள்ளுங்கள். உலகத்தாரின் நயங்காட்டுதலுக்கு விலகி ஓடுங்கள்.

**நீதிமொழிகள் 1:10**

**என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே.**

**ஜெபம்:** அன்பின் பரம தந்தையே, உம்முடைய ஆலோசனைகளை நான் தள்ளிவிடாமலும் உம்முடைய கடிந்துகொள்ளுதலை வெறுக்காமலும், அவற்றை இறுகப்பற்றிக் கொண்டு முன்னேறிச் செல்ல கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிள்ளைகளின் வழி

"நான் செய்யாத குற்றங்களையா அவன் செய்கின்றான்? நான் அனுபவிக்காத சுகபோகங்களையா அவன் நாடித் தேடுகின்றான். இது அவனுடைய வாலிப வயது, வாலிபத்தின் நாட்களை அவன் சற்று அனுபவிக்கட்டும். விருப்பினதை உடுத்தி, ஆசைப்படுவதை குடிக்கட்டும், என்னை இரட்சித்த கர்த்தர் அவனை இரட்சிப்பார்" என்று ஒரு தகப்பனானவர் தன் மகனாவனனுடைய போக்கை குறித்து தன் மேய்பரானவரிடம் கூறிக் கொண்டார். இன்று இப்படிப்பட்ட எண்ணக் கருத்துக்களோடு வாழ்பவர்கள் தங்களை விசுவாசமார்க்கத்தார் என்று கூறிக் கொண்டாலும், அவர்கள் பின்மாற்றமான வாழ்க்கையையே வாழ்ந்த வருகின்றார்கள். பிள்ளை கள் தங்கள் பெற்றோர் கூறும் நல் ஆலோசனைகளை மீறி தவறு செய்வது ஒரு காரியம். ஆனால், பிள்ளைகள் பாவம் செய்யட்டும் என்ற மனதுடன் பரா முகமாகாய் இருப்பது வேறு ஒரு காரியம். ஒரு நல்ல தகப்பனானவன், தான் விட்ட தவறுகளின் பின்விளைவுகளை அறிந்திருக்கின்றபடியால், தான் நேசிக்கும் தன் பிள்ளைகள் அவ்வேதனையான வழியிலே செல்லமால் இருப்பதற்கு தன்னால் முடிந்த காரியங்கள் யாவையும் செய்ய ஆயத்தமுள்ளவனாக இருப்பான். அதிலே தகப்பனானவனுடைய சிட்சையும் உள்ளடங்கும். ஏலி என்னும் ஆசாரியனானவன், தன் பிள்ளைகள் துன்மார்க்கமான வழியியே வாழ்கின்றதை அறிந்த போதும், அவன் தன் குமார்களை நோக்கி: நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது என்ன? இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் பொல்லாத நடக்கைகளைச் சொல்லக்கேட்கிறேன். என் குமாரரே, வேண்டாம் நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல. கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே. ஆனாலும் அவன் தன் இருதயத்திலே தேவனைப் பார்கிலும் தன் குமாரரை மதித்து வந்ததால், அவன் தேவனை அசட்டை செய்தான். அவ்வண்ணமாக சில பெற்றோரும், மற்ற மனிதர்கள் முன்னிலையிலே, பிள்ளைகள் தவறு செய்யும் போது கண்டிக்கின்றார்கள். ஆனால், அவர் அதை தேவன் முன்னிலையிலே உண்மையாக கூறுவதில்லை. பிள்ளைகளை நெறிப்படுத்துவதற்குரிய காரியங்களை செய்வதில்லை. நாமோ அப்படி செய்யாமல், இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் முன்னிலையிலே உண்மையாய் நடக்கக் கடவோம்.

**நீதிமொழிகள் 22:6**

**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழ என்னை அழைத்த தேவனேஇ உமக்கு முன்பாக நான் என் உள்ளத்திலே உண்மையாக இருக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கடைநேர மனந்திரும்புதல்

ஒரு மனிதனானவன், தன் வாழ்வின் பெரும்பகுதியிலே, ஆண்டாண்டு காலமாக ஆத்துமாவை விடுதலையாக்கும் சத்தியம் கேட்டிருந்தான். நித்திய வாழ்வுக்கு செல்லும் வழி எது என்பதை திட்டமாக அறிந்திருந்தும், தன் உலக வாழ்க்கை தரும் இன்பங்களை விட மனதில்லாதவனாய் இருந்தான். அவனுடைய பொறுப்பற்ற வாழ்க்கையைக் குறித்து கேள்விகளை கேட்கும் சில விசுவாசிகளுக்குஅவன் மறுமொழியாக: "நான் ஆண்டவர் இயேசுவோடு சிலுவையின் தொங்கிய நல்ல கள்வனைப் போல, என் இறுதி நாட்களில், ஆண்டவர் இயேசுவை என் சொந்த இரட்சராக ஏற்றுக் கொள்வேன்" என்று கூறி அவ்விடத்தைவிட்டு சென்று விடுவான். ஒருநாள் ஒரு அனுபவமிக்க மேய்பரானவர் அவனோடு பேசிக் கொண்டிருக்கும் போது, அவன் வழமை போல தான் நல்ல கள்வனைப் போல கடைசி நேரத்தில் மனம் திரும்பி விடுவேன் என்று கூறினான். அதற்கு அந்த மேய்பரானவர் சாந்தமுள்ள தொனியோடு அவனை நோக்கி: மகனே, நீ அவ்வண்ணமாக மனந்திரும்ப உனக்கு சந்தர்ப்பம் உண்டானால் நல்லது. ஆனால், ஆண்டவர் இயேசுவோடு, சிலுவையில் மற்றப் பக்கம் தொங்கிய மனதிம்பாத கள்வனைப் போல சடுதியிலே நீ மரித்துப் போனால் உன் நிலை என்னாகும் என்று எப்போதவது சிந்தித்துண்டா? என்று கேட்டார். மனக்கலக்கத்தோடு அவ்விடம் விட்டுச் சென்ற அந்த மனிதனாவன், அன்றைய நாளிலே தன் வாழ்க்கையின் வழியை குறித்து சிந்திக்க ஆரம்பித்தான். பிரியமானவர்களே, சத்திய வழியிலே செல்வதற்கு தடையோ, எதிரான சட்டமோ இல்லாத நல்ல நாட்கள் வாழ்விலே உண்டாயிருக்கும் போது, ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொள்ளாதவன், உபத்திரவத்தின் நாட்கள் வரும் போது என்ன செய்வான்? யோபு என்னும் தேவ பக்தியுள்ள மனிதனுடைய மனைவி தேவனை அறிந்தவள் போல வாழ்ந்து வந்தாள். ஆனால், உபத்திரவத்தின் நாட்கள் வாழ்க்கையை சூழ்ந்து கொண்ட போது, தேவனை தூஷிக்கும்படி தன் கணவனாகிய யோபுக்கு மதியற்றவளைப் போல துர்ஆலோசனை கூறினாள். எனவே, எந்தவித பெலவீனமோ, ஆசை இச்சைகளோ உங்கள் இருதயங்களை ஆண்டுகொள்ள விடாதபடிக்கு, தேவ சத்தத்தைக் கேட்கும் போது, மனதை கடினப் படிடுத்திக் கொள்ளாமல்? இன்றே இப்பொழுதே உங்கள் வாழ்க்கையை முற்றும் முழுவதுமாய் ஆண்டவர் இயேசுவிடத்தில் ஒப்புக் கொடுங்கள்.

**2 கொரி 6:2**

**இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்.**

**ஜெபம்**: பரிசுத்ததத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, பிற்பாடு பார்த்துக் கொள்வோம் என்று கூறி, மனந்திரும்புதலின் நாளை நான் பிற்போடாதபடிக்கு, உடடினடியாக மனந்திரும்பும் உணர்வுள்ள உள்ளத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – எபேசியர் 6:18–20

# கடினமனங்கள் உடைக்கப்படும்

சத்தியத்தை அறிந்த மனிதனொருவன், அநேக ஆண்டுகளாக, பல தேவ ஆலோசனைகளை கேட்டிருந்தான். அந்த ஊரிலுள்ள விசுவாசி களில் சிலர், அவன் தன் பெலவீனங்களிலிருந்து விடுதலையாவற்குரிய வழிகளை உண்டாக்கிக் கொடுத்திருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், அவ னுக்கு உதவி செய்வதற்கு அநேகர் முன்வந்து பல சந்தர்ப்பங்களை கொடுத்திருந்தார்கள். அப்படியிருந் தும் அவன் மனதிரும்ப மனதில் லாதவனாய் தன் இருதயத்தை கடி னப்படுத்திருந்தான். அவனைக் குறி த்து அவனை அறிந்து விசுவாசிகள் என்ன செய்ய முடியும்? அவனை காணும் போதெல்லாம் சபிப்பதா? அல்லது அவனை நினைக்கும் போத தெல்லாம் அவன் கல்மனம் உடை யும்படிக்கு அவனக்காக தேவனை வேண்டிக் கொள்வதா? இதில் எந் தத் தெரிவு அவனை அறிந்த ஒரு விசுவாசியானவனுக்கு தகுதியானது? சற்று சிந்தித்துப் பாருங்கள். அவனுடைய ஆத்துமா பாதாளத்தில் அழி ந்து போகாமல் அவனுக்காக அவனை அறிந்த அந்த விசுவாசியானவன் ஜெபிப்பதே ஒரு தேவபிள்ளைக்கு தகுதியானது. அதனால், அவ னோடு அந்த விசுவாசியானவன் உடன் சகோதரனைப் போல ஐக்கியமாக இரு க்க வேண்டும் என்பது பொருளல்ல. ஒரு விசுவாசியானவன் உலகம் முழுவதையும் ஆதயப்படுத்திக் கொள்வதைப் பார்க்கிலும், அவன் தன் ஆத்துமாவானது இந்து உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுவது முக்கியமானது என்று வேதம் கூறுகின்றது. தேவ ஆலோசனையை அசட்டை செய்து புறக்கணிக்கின்றவனைக் குறித்து பரி சுத்த வேதாகமம் என்ன கூறுகின்றது. “வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரை யைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.” என்று அறிவுரை கூறுகின்றது. அன்பின் அரவணைப் போடு கூறும் புத் திமதியை தள்ளிவிடுகின்ற தன்னுடைய பிள்ளையை ஒரு நல்ல தகப் பனானவர், அவன் பாட்டிற்கு விட்டுவிடுவனோ? இல்லை, அவன் உணர் வடையும் படி, கண்டித்து, தண்டித்து, சிட்சிப்பார் அல்லவோ? அதுபோ லவே, நம்முடைய பரம பிதாவும், உணர்வற்ற இருதயங்களை உணர்வ டையும்படி செய்கின்றார். ஒருவேளை அனுபவங்கள் கசப்பாக இருந்தா லும், அவற்றுக்கூடாக நன்மையான விளைச்சலை கண்டடையும்படி கிருபை செய்வார். எனவே நம்பிக்கையில் உறுதியாயிருந்து, கல்ம னங்கள் உடையும்படிக்கு ஜெபம் செய்யுங்கள்.

**1 தீமோத்தேயு 2:1**

**எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெப ங்களையும் வேண்டுதல்க ளையும் ஸ்தோத்திரங்களை யும் பண்ணவேண்டும்;**

**ஜெபம்:** உணர்வள்ள இருதயத்தை எனக்கும் தந்த தேவனே, என்னுடைய இருதயத்தில் ஒருபோதும் உணர்வற்றுக் போகாதபடிக்கு, எனக்கு பிரகாச முள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆத்துமாக்கள் அருமையானவைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், தன் வாலிப நாட்களிலிருந்து தினமும் குடித்து வெறித்து, தகாத இச்சைகளை நடப்பித்து, தெருவிலே சண்டை பண்ணி, களவு செய்து, தூஷணமான வார்த்தைக்கை பேசி துன்மார்க்கமான வழியிலே வாழ்ந்து வந்தான். அவனை நெறிப்படுத்தும்படி அரச அதிகாரிகளால் அனுமதி பெற்ற ஆலோசகரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அந்த வாலிபனை விடுதலையாக்கும்படிக்கான வழிமுறைகளை படிப்படியாக, அதற்கென்று நியமிக்கப்பட்ட நிலையத்திலே, பொறுமையோடு செய்து வந்தார். அந்த ஆலோசகருக்கு வாலிப பிராயத்திலுள்ள ஒரு மகனும், மகளும் இருந்தார்கள். அடிமைத்தன கட்டுகளிலே இருக்கும் அந்த மனிதனானவனை, அவர் தன்னுடைய வீட்டிற்குள் போக்கும் வரத்துமாக இருப்பதற்கு அனுமதிப்பாரோ? அல்லது அவன் தன்னுடைய வாலிப பிள்ளைகளோடு ஐக்கியமாக இருக்கும்படி பாராமுகமாக விட்டுவிடுவாரோ? நல்வழியிலே வாழும் தன்னுடைய பிள்ளைகளை குறித்து அவர் மிகவும் கவனமுள்ளவராக இருப்பார். சில ஆண்டுகளுக்கு பின்னர், அடிமைத்தன கட்டுகளிலே வாழ்ந்த அந்த மனிதனாவன், அவனுடைய முப்பதாவது வயதிலே, அவனுக்கு பன்னிரண்டு வருடமாக இருந்து வந்த அடிமைத்தன கட்டுகளிலிருந்து முற்றாக விடுதலையடைந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த நெறிப்படுத்தும் ஆலோசகர் பிரத்தியேகமான வேலைக்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அதுபோலவே, சில ஊழியர்களும் சில பிரத்தியேகமான அழைப்பை பெற்றிக்கின்றார்கள். அவர்களை கண்டு, நாமும் அவர்களைப் போல ஊழியம் செய்யலாம் என்ற எண்ணம் கொள்ள கூடாது. ஒருவனை இரட்சிப்புக்குள் நடத்த வேண்டும் என்று எண்ணி, நம்முடைய செயல்களால் இரட்சிப்படைந்த வேறு இருவரை பின்மார்க்கத்திற்கு தள்ளிவிடவோ அல்லது தன்னுடைய ஆத்துமாவையோ கெடுத்துக் கொள்ளக் கூடாது. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவே, நாம் நற்கிரியைகளை செய்வதை நிறுத்திவிடக்கூடாது. ஆனாலும் நற்கிரியைகளை செய் கின்றவன், நற்கிரிகைகளை செய்வதற்காக மற்றய விசுவாச மார்க்கத் திலே உறுதியாய் இருப்பவர்களை தீயவழிக்குள் தள்ளுகின்றவனா கவும் மாறிவிடக் கூடாது. ஒருவனும் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி தன் னைக் குறித்து எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும். எனவே,தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடங்கொடுங்கள்.

**மத்தேயு 16:26**

**மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?**

**ஜெபம்**: உம்முடைய சித்ததை நிறைவேற்றும் தேவனே, என்னுடைய கிரியைகள் ஒருபோதும் எந்த ஆத்துமாவையும் இடறல்படுத்தாமல் இருக்கும்படிக்கு என் மனக்கண்களை தூய்மையாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாட்கள் கொடியதாவதற்கு முன்னர்...

ஒரு வாலிபனானவன், உலக சிநேகிதர்களோடு சேர்ந்து தகாத வழிகளிலே சென்று தன்னை கெடுத்துக் கொண்டிருப்பதையும், அவனுடைய தகப்பனானவர் அதைக் குறித்து அதிகமாக கரிசனை காட்டாதிருப்பதையும் கண்ட மேய்ப்பரானவர், அந்தத் தகப்பனானவரோடு அவ்வப்போது அந்த வாலிபனை நல்வழிப்படுத்துவதைக் குறித்து பேசிக் கொண்டார். அந்தப் பேச்சை நிறுத்த வேண்டும் என்று தன் மனதிலே தீர்மானித்துக் கொண்ட அந்தத் தகப்பனானவர், ஒருநாள் மேய்யபரானவரை நோக்கி: ஆகாதவனான என்னை இரட்சித்தவர், ஒரு நாள் என் மகனையும் இரட்சிப்பார் என்று கூறினார். அந்ததகப்பனானவர் கூறிய கூற்று நன்மையானதும், விசுவாசத்தை அறிக்கை செய்கின்றதாகவும் காணப்பட்டது. ஆனாலும் அவருடைய மனநிலையானது அந்தக் கூற்றிற்குரியதாக இருக்கவில்லை. தான் நம்பும் சத்த்தியத்தை பற்றிக் கொண்டு, விசுவாசத்திற்குரிய கிரியைகளைஅவர் செய்யாமல், சந்தர்ப்பத்திற்கு தப்பிக் கொள்ளவதற்காக அப்படி கூறினார். பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு தாம் வளர்ந்த ஊரிலுள்ள மக்களுடைய அவவிசுவாசத்தை கண்டபோது, "அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை" என்று கூறினார். எனவே, "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள் அவர் சமீப மாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன் அவர் அவன்மேல் மனதுருகுவார் நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன் அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்." என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு அறிவுரை கூறுகின்றது. தேவனானவர் அன்புள்ளவர் எனவே என் வாழ்வில் காரியங்களை நடப் பிப்பார் என்று அறிக்கை செய்கின்றவன், அந்த விசுவாச அறிக்கை க்குரிய கிரியைகளை, உண்மையுள்ள மனதுடன் தன் வாழ்வில் சொல்லிலும் செயலிலும் நடப்பிக்கக் கடவன். நாட்கள் கொடியதாய் மாறுதவற்கு முன்னர், உங்கள் மனநிலையை மாற்றிக் கொள்ளுங்கள். கர்த்தர் உள்ளத்திலுள்ளததை அறிந்திருக்கின்றார்

**ஏசாயா 55:6**

**அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, காலத்தை தாமதிக்காமல், என் வாழ்விலே உண்டாயிருக்கும் நன்மையான நாட்களிலே உம்மைத் தேடும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வார்த்தையில் நிலைத்திருங்கள்

ஒரு ராஜ்யத்தை அரசாண்டு வந்த பராக்கிரமமுள்ள சக்கரவத்தியானவன், யுத்தத்திற்கு செல்லும் தன்னுடைய போர்சேவர்களை கூட்டிச் சேர்த்து, அவர்கள் யுத்தத்தில் வெற்ற பெற வேண்டிய சகல விதமான ஆயுதங்களும், யுக்திகளைும், வழிநடத்துதலும், கட்டளைகளும் உங்களுக்கு தகுந்த நேரத்திலே கொடுக்கப்படும். அவைகளை நீங்கள் கைக் கொள்ளும் போது, நீங்கள் ஒருபோதும் தோற்றுப்போவதில்லைஎன்று உறுதிமொழி கூறினான். அவர்களில் ஒருவன் கொடுக்கப்பட்ட ஆயுதத்தை தரிக்காமல் போர்களத்தில் நின்றால், அவனை காணும்எதிரியானவன் என்ன செய்வான்? அவனிடம் ஆயுதம் இல்லை எனவே அவனை விட்டுவிடுவோம என்று கூறுவானோ? யுத்தத்தில் தன்னுடைய எதிரி யார் என்றும் எதிரியின் பெலன் இன்னதென்றும் அறியாமல் போர்களத்தில் நிற்கும் போர்வீரனின் நிலைமை எப்படியாக இருக்கும்? ஒருவேளை அவன் தன் எதிரியையும் தன் சக போர்வீரன் என்று கருதி பராமுகமாக விட்டு விடக்கூடும் அல்லவோ? யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது, கட்டளை கொடுக்கும் தலைவனோடுள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு போனால் போர்களத்தில் எப்படி யுத்தம் செய்ய முடியும்? அவ்விடத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவது எப்படி சாத்தியமாகும்? ஒருவேளை இந்த உலகிலே மனிதர்கள் மத்தியிலே நடைபெறும் யுத்தங்களிலே எதிரிகளும் பெலவீனமடைந்து சோர்ந்து போகலாம் ஆனால் ஆவிக்குரிய யுத்தத்திலே, நாம் அசதியாக இருக்கும் நேரத்தையே காத்திருக்கும் எதிரியாகிய பிசாசானவனும் அவனுடைய தூதர்களும் அந்த நேரத்திலே நம்மை அழித்துப்போடும்படி கிரியைகளை நடப்பிப்பான். நம்முடைய தேவன் சோர்ந்து போவதில்லை, இளைப்படைவ துமில்லை. அவர் சோர்ந்து போகின்றவனுக்கு பெலன் கொடுக்கின்றார். சத்துவமில்லாத வேளைகளிலே சத்துவத்தை பெருகப் பண்ணுகின்றார். எப்படியாக அவர் பெருகப் பண்ணுகின்றார்? அவர் நமக்கு கொடுக்கும் சர்வாயுதவர்க்கம் அவருடைய ஜீவ வார்த்தைகளிலே அடங்கி இருக்கின்றது. அவருடைய விளம்பிய வேதம் குறைவற்றது. அவர் தம்முடைய வார்த்தையை அனுப்பி குணமாக்குகின்றார். அவருடைய வசனம் நம் செல்லும் வழிக்கு வெளிச்சமாக இருக்கின்றது. எனவே அதை வாசிப்பது மாத்திரமல்ல, அதன்படி நாம் நடக்கும் போது, நாம் சோர்ந்து போகும் நேரத்திலும் புது பெலன் அடைகின்றவர்களாக இருப்போம்.

**சங்கீதம் 119:114**

**என் மறைவிடமும் என் கேடகமும் நீரே; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.**

**ஜெபம்:** என் அடைக்கமும் அரணுமான என் தேவனே, நாம் எப்போதும் அந்த அரணுக்குள்ளே இருக்கும்படிக்கு உம்முடைய வார்த்தையை தியானித்து அதன் வழியிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கண்ணிகளுக்கு தப்புவிப்பார்

ஒரு ஊரின் தெருவில் இரவு நேரத்திலே வெளிச்சம் இல்லாதிருந்ததி னால், வனவிலங்குகளினாலும், கள்வர்களினாலும் அங்கிருந்த ஜனங் கள் தாக்குதல் செய்யப்பட்டார்கள். ஊரின் மூப்பர் சங்கமானது, கூட்ட ங்கூடி அந்தத் தெருவிலே மின்விளக்குகளை பொருத்தும்படி தீர்மானி த்து, துரிதமாக அதை செய்து முடித்தார்கள். ஜனங்கள் வெளிச் சத்திலேநடந்து செல்லும் போது, அவர்களுக்கு எதிராக இருந்த பயங்கரங்கள் யாவற்றையும் அவர்கள் இலகுவாக, தூரத்தி லேயே கண்டு கொண்டார்கள்.

**சங்கீதம் 91:2**

**அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள் ளைநோய்க்கும் தப்புவிப்பார்.**

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க் கையிலே, ஏதிரிகளின் சூழ்ச்சிகளை நாம் எப்படி அறிந்து கொள்ளலாம்? எதிரியாகிய பிசாசானவனையும், அவன் செயல்களையும் பற்றி அதி கதிகமாக கற்றுக் கொள்வதி னாலோ? இல்லை, நாம் நம்முடைய ஆண் டவராகிய இயேசு காட்டிய வழியிலே வாழ்ந்து, தேவ வசனத்திலே நிலைத்திருந்து, அனுதினமும் அவர் பாதத்தில் அமர்ந்து ஜெபிக்கின் றவர்களாக இருந்தால், நாம் எதிரியாகிய பிசாசானவனையும் அவன் செயல்களையும் குறித்து, சிந் தித்து, பயந்து, திகிலடையத் தேவையில்லை. நாம் ஜீவ ஒளியிலே நடக்கும் போது, நமக்கு எதிரான தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் தெளிவாக அறிந்து கொள்வோம். தீர்க் கதரியாகிய எலிஷாவின் நாட்க ளிலே, எதிரிகள் இஸ்ரவேல் தேசத்திற்கு எதிராக யுத்தத்திற்கு புறப்படு ம்படி திட்டம் போடுகின்ற வேளையிலே, அந்த திட்டங்கள் யாவையும் தீர்க்கதரியானவன் இஸ்ரவேலின் ராஜாவிற்கு வெளிப்படுத்தி வந்தான். எதிரிகளின் தந்திரமான திட்டங்களை தீர்க்கதரிசியாகிய எலிஷா எப்படி அறிந்து கொண்டான்? எதிரிகளை வேவு பார்க்கும்படி அவன் சென்றிரு ந்தானா? இல்லை, அவன் தேவனாகிய கர்த்தரோடு ஐக்கியமாக இரு ந்தான். தேவனுடைய வழியிலே வாழ்ந்து வந்தான். தேவனாகிய கர்த் தர்தாமே எதிரிகளின் சூழ்ச்சிகளை, தீர்க்கதரியானவனுக்கு தெளிவாக வெளிப்படுத்தினார். அதுபோலவே, நாம் தேவ சத்தத்தை கேட்கும்படி க்கு, அவருடைய சத்தம் இன்னதென்பதை அறிந்து கொள்ள வேண் டும். அனுதினமும் அவரோடு ஜெபத்தினாலே இடைப்பட வேண்டும். அப்பொழுது அவர் நம்மோடு பேசுகின்றதை அறிந்து கொள்வோம். எதிரிகள் நமக்கு மறைவாக கண்ணியையும் கயிறுகளையும் மறைவாய் வைத்தாலும், நம்முடைய கால்கள் இடறாதபடிக்கு கர்த்தம் நம்மை எச்சரித்து நடத்துவார்.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, என் இரட்சிப்பின் பெலனே, யுத்தநாளில் என் தலையை மூடுகின்றவரே, எதிரிகளின் வலைக் குள் சிக்கிக் கொள்ளாமல் உம் வார்த்தையின் வெளிச்சத்தில் நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெயம் கொள்ளும் வாழ்க்கை

இந்த உலகிலே வாழும் நாட்களிலே மனிதர்கள், தங்கள் வாழ் நாட்களிலே, கற்றுக் கொள்ள வேண்டும் என்று பல முயற்சிகளை எடுக்கின்றார்கள். கற்றுக் கொள்வது என்று கூறும் போது, பாடசாலைகளுக்கோ, கல்வி நிலையங்களுக்கோ சென்று முறைப்படி பாடங்களை கற்றுக் கொள்வது என்பது பொருளல்ல. பல காரணங்களுக்காக, கற்றுக் கொள்ள வேண்டும் என்று முயற்சிகளை எடுக்காதவர்களும் அவர்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சூழ்நிலைகளால் பல காரியங்களை கற்றுக் கொள்கின்றார்கள். அவற்றுள் சில கடினமான அனுபவங்களாக இருக்கும். அதே வேளையிலே முறைப்படி மேற்படிப்புக்களை முடித்தவர்களை இந்த உலகமானது அவரவர் கல்வித் தகமைகளுக்கேற்ற கனத்தை கொடுகின்றது. அதனால், இந்த உலகிலே வாழும் கல்விமான்கள் யாவரும் ஞானிகள் என்பதும் பொருளல்ல. இந்த உலகத்தின் கல்வியறிவு யாவும் இந்த உலகத்துக் குரியதும், உலகத்திலுள்ளவைகளை குறித்தவைகளாவும் இருக்கின்றது. வானமும், பூமியும், அதிலுள்ள யாவையும் அழிந்து போகும் போது, அவைகளோடே கூட உலக அறிவும் கடந்து போகும். உலகத்திலுள்ள அறிவினாலே, எவரும் உலகத்தை ஜெயித்துவிட முடியாது. உலக கல்வியானது உலகத்தின் கட்டிற்பாட்டிற்குள் இருக்கும் போது, கட்டுபாட்டிலிருப்பது எப்படி கட்டுப்படுத்துவதை மேற்கொள்ள முடியும். அழியாமையை குறித்து அறிவானது, பரத்திலிருந்த உண்டாகின்றது. பரலோகத்திற்குரியவைகள் இந்த உலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டது அல்ல. அவை உலகத்திற்குரியவைகளுக்கு மேற்பட்டதாக இருக்கின்றது. அந்த அறிவானது பரலோகத்திலிருந்து வரும் மெய் ஞானத்தினால் உண்டானவைகளாக இருக்கின்றது. அந்த ஞானமானது, கல்வியினாலோ, அனுபவத்தினாலோ யாரும் பெற்றுக் கொள்ள முடியாது. அந்த மெய்ஞானமானது விசுவாசத்தினாலே உண்டாகின்றது. தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? எனவே, விசுவாசத்திலே நிலைத்திருங்கள். விசுவாசத்திலே நிலைத்திருப்பவன் தேவ வார்த்தையில் உறுயாய் நிலைத்திருக்க வேண்டும். நாம் எவ்வளவாய் கற்று தேர்ந்தவர்களாக இருந்தாலும், ஆண்டவராகிய இயேசுவினாலன்றி நாம் இந்த உலகத்தை ஜெயம் கொள்ள முடியாது.

**நீதிமொழிகள் 2:6**

**கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக பிதாவே, உம்முடைய நாமமே மெய்ஞானம் என்ற உண்மையை அறிந்தவனாய் எப்போதும் உமக்கு பயந்து உம்முடைய வார்த்தையின் வழியில் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள்| ஆடி 29

📖 மாலை வாசகம் – சங்கீதம் 119:1

# கற்றவைகளை கைக்கொள்ளுங்கள்

கணக்கியில் கல்வித்துறையிலே மேற்படிப்பை தொடர்ந்து கொண்ட மனிதனொருவன், அதின் பாடங்களில் அதிவிசேஷட சித்தியை பெற்று அந்தத் துறையிலே அதியுயர் பட்டத்தை பெற்றுக் கொண்டான். அவன் வாழ்ந்து வந்த ஊரிலேயே, அந்தத் துறையிலே அவனுடைய பேச்சுக்கும், அறிவிற்கும் நிகரானவர்கள் கண்டு கொள்வது அரிதான காரியமாக இருந்தது. அவன் தான் கற்றுக் கொண்டவைகளை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவனாக இருந்து வந்தான். ஆனாலும், அவனுடைய சொந்த வாழ்க்கையிலே கணக்கு வழக்குகள் முறையற்றதாக காணப்பட்டது. அதாவது, அவன் கற்றுத் தேர்ந்தது உண்மை ஆனால் அவன் கற்றவைகளை தன் சொந்த வாழ்வில் கைகொள்வதில்லை. கருபொருளாவது, ஒருவன் ஒரு துறையிலே தேர்ச்சி பெற்றிருப்பதால், அவன் தன் வாழ்விலே அதைக் கைகொள்கின்றான் என்பது பொருளல்ல. இன்றைய நாட்களிலே தொழிநுட்பமானது பல காரியங்களை குறித்த அறிவை, மனிதர்களுடைய உள்ளங் கைகளுக்கு கொண்டு வந்ததுள்ளது. தேவனைப் பற்றிய அறிவிலே வளர வேண்டும், வேதத்தை கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி, பலர் இறையியலைக் கற்று கலாநிதிப் பட்டங்களையும் பெற்றுக் கொள்கின்றார்கள். அவர்கள் கிரேக்க பாஷை, எபிரெய பாஷை, ஆங்கில பாஷை என்று கூறி, வேதத்தின் பல அம்சங்களை அழகாக தொகுத்து வழங்குகின்றார்கள். இந்த அறிவு அவர்களுக்கு இருப்பதினால் மாத்திரம், அவர்கள் தேவனுடைய வார்த்தையை தங்கள் சொந்த வாழ்விலே கைக் கொள்கின்றார்கள் என்று கூறிவிட முடியாது. ஒரு மரத்தை அதன் கனிளால் அறிவது போல, தங்களை தேவனுடையவர்கள் என்று கூறிக் கொள்பவர்களையும் அவர்கள் வாழ்க்கையின் கனிகளால் அறியப் படுவார்கள். இந்த விடயத்திலே விதிவிலக்கேதுமில்லை. மன்னிப்பின் மாட்சியையும, அதின் ஆழத்தையும் நன்றாக அறிந்தவன், தனக்கு விரோதமாக வேறொருவன் செய்த தப்பிதத்தை மன்னிக்க முடியாதிருந்தால், அவன் பெற்ற இறையியல் அறிவினாலே அவன் ஆத்துமாவிற்கு பலன் என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். எனவே திருவசனத்தை கற்று, அதைக் கைக்கொள்கின்றவர்களாக வாழுங்கள்.

**யாக்கோபு 1:22**

**அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த நான் திருவசனத்தை கேட்டு, நன்றாக பேசுகின்றவனாக மாத்திரம் இருக்காமல், அவற்றை கைகொள்ளத்தக்தான உணர்வுன்ன இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனத்தாழ்மையை கற்றுக் கொள்ளுங்கள்

அநேகமாயிரம் பொன் வெள்ளிகளைப் பார்க்கிலும் தேவனாகிய கர்த்தர் விளம்பின வேதமே எனக்கு நலம் என்று சங்கீதப் புத்தகத்திலே காண் கின்றோம். ஏனெனில், திராளான செல்வத்தினால் கண்டடைய முடி யாத, ஒப்பற்ற நித்திய வாழ்வை தேவ வார்த்தைகள் வழியாக மட்டுமே மனிதர்கள் பெற்றுக் கொள்ள முடியும். வாழ்வு தரும் வழியை வேதம் நமக்கு பட்டப் பகலைப் போல காண் பிக்கின்றது. ஆனாலும், பரிசுத்த வேதா கமத்தை முறைப்படி, நன்றாக கற்று பட்டம் பெற்றவர்களில் சிலர் நித்திய வாழ்வின் வழியைவிட்டு மனிதர்களை தவறான வழிக்கு நடத்திச் சென்று விடுகின்றார்கள். அது எப்படி சாத்தி யமாகும்? ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, வேதபாரகர் என்று ஒரு சாரார் இருந்தார்கள். இவர்கள் அன்றைய நாட்களிலே, வேத பிரமாணங்களை முறைப்படி கற்று, பாண்டித்தியம் பெற்று, மதத்தலைவர்களால் அங்கீ காரம் பெற்றிருந்தார்கள். இவர்களை சட்ட வல்லுஞர்கள் என்றும் அழை ப்பார்கள். ஆனாலும், வேத பிரமாணங்கள் யாவும் வாக்களிக்கப்பட்ட மீட் பராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிதாயிருந்த போதும், இவர்கள் முன் னிலையிலே பிரதியட்சமாக அவர் வந்த போதும், அவரை அறியாதபடி மனக்கண்கள் குருடுபட்டவர்களாக இருந்து, ஆண்டவர் இயேசுவை கொன்றுபோடும்படி திட்டம் போட்டு வந்தார்கள். இவர்களை குறித்து ஆண்டவர் இயேசு கூறும்போது: "மாயக்காரராகிய வேதபாரகரே! பரி சேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ் யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள் நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை" என்று கண்டித்துக் கூறினார். வேதத்தை நன்றாக கற்றவர்களின் நிலைமை எப்படியாய் இந்த நிலைக்கு வந்தது. தங்கள் அழிவுக்காக வேத பிரமா ணங்களை கற்றுக் கொண்டார்களா? அவர்கள் தாங்கள் கற்றுக் கொண் டதை கைக்கொள்வதில்லை. அதை சுட்டிக் காட்டினாலும், கீழ்படிவத ற்கு மனத்தாழ்மை அவர்களிடத்தில் இருந்ததில்லை. பிரியமானவர் களே, வேதத்தை கற்று பாண்டித்தியம் பெறுவது உங்களுக்கு நன்மை யாக இருக்கும்படி, நீங்கள் எவ்வளவாய் கற்றுக் கொள்கின்றீர்களோ அவ்வளவாய் உங்களைத் தேவன் முன்னிலையிலே மனதார தாழ்த்தி, பரிசுத்த ஆவியாவரின் வழிடத்துதலுக்கு இடங் கொடுங்கள். உலகத் தினால் உண்டான பட்டங்களை பெறுவதற்கு முன், வேதம் கூறும் மனத் தாழ்மையை கற்றுக் கொள்ளுங்கள்.

**மத்தேயு 23:12**

**தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன் னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்**

**ஜெபம்**: சகல சத்தியத்திலும் என்னை வழிநடத்து சத்திய ஆவியானவரை இந்த உலகத்திற்கு அனுப்பின தேவனே, நான் எதை செய்தாலும், ஆவி யானவரின் வழிநடத்துதலின்படி செய்ய எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மேன்மையான பட்டப்படிப்பு

ஐயா மேய்ப்பர் அவர்களே, வேதத்தை குறித்து நீங்கள் அநேக காரியங்களை கற்று பாண்டித்தயம் பெற்றுகின்றீர்கள். நானும் உங்கள் வழியிலே நடக்க என் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக (Mentor)இருந்து வழி காட்ட வேண்டும் என்று ஒரு வாலிபனானவன் மேய்யரானவரொருவரை கேட்டுக் கொண்டான். நன்கு வயதான அந்த மேய்ப்பரானவர், அந்த வாலிபனை நோக்கி: மகனே, நான் கற்று பாண்டித்தியம் பெற்ற பெரிய கலைகளிலே அதிமுக்கியமானதை உனக்கு சொல்லித்தருகின்றேன். நீ அதை உன் இளவயதிலேயே கற்றுக் கொள்வாயானால் உன் வாழ்க்கை வெற்றிதான் என்று கூறினார். அதற்கு அந்த வாலிபனானன் ஆர்வத்தோடு, அதை எனக்கு சொல்லித் தாருங்கள், நான் தாமதமின்றி அதைக் கற்றுக் கொள்ளுவேன் என்று கூறினார். அதற்கு அந்த மேய்ப்பரானவர்: மகனே, மனத்தாழ்மை கற்றுக் கொள்ளு. முதலாவதாக உன் பெற்றோர் முன்னிலையிலே கீழ்படிவுள்ளவனாக இரு. ஏற்ற காலத்திலே கர்த்தர் உன்னை உயர்த்துமவரை மூப்பர்களுக்கு கீழ்படிந்திரு. இந்த கலையை நீ கற்றுக் கொள்ளாமல், வேறு எதைக் நீ கற்றுக் கொண்டாலும், தேவன் முன்னிலையிலே நீ பிரியமுள்ளவனாக இருக்க முடியாது. இதுதான் ஆவிக்குரிய வாழ்வின் வெற்றியின் இரகசியம் என்று தயவாய் அவனுக்கு கூறினார். அவர் ஏதாவது ஒரு பட்டப்படிப்பை குறித்து கூறுவார் என்று எதிர்பார்த்திருந்த அவன், சற்று ஏமாற்றமடைந்தான். ஆம் பிரியமானவர்களே, இந்த இந்த உலகிலே அநேக காரியங்களை கற்றாலும், தேவ சித்தம் நிறைவேறும்படி நம்மை நாம் தாழ்த்தி ஒப்புக் கொடுக்காவிட்டால், நாம் கற்றுக் கொண்டவைகளால் பலன் அற்பமானதாகவே இருக்கும். இன்று பலர், பல வேதபாடங்களை கற்று, சில இடங்களிலே இளவயதி லேயே போதகர், மேய்ப்பர், சுவிசேஷகர் என்று பற்பல நாமங்களை தங்கள் பெயர்களின் முன் பதவிகளாக பெற்றுக் கொள்கின்றார்கள். அவர்கள் எதைப் பெற்றுக் கொண்டாலும், மனத்தாழ்மையும், கீழ்படிவையும் கற்றுக் கொள்ளும்வரை, அவர்கள் தேவ சித்தத்தை தங்கள் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க முடியாது. கிறிஸ்துவைப் போல மாறுபடிக்கு முதலாவதாக, கிறிஸ்துவில் இருந்த சிந்தையை கற்றுக் கொள்ளுங்கள். வேதம் சார்ந்த பட்டப்படிப்புக்கள், இந்த மேன்மையை உங்க ளுக்கு கற்றுக் கொடுக்காவிட்டால், அந்த கல்வியினால் என்ன பிரயோஜனம்?

**பிலிப்பியர் 2:8**

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

**ஜெபம்:** உம்முடைய திருக்குமாரனுடைய சாயலிலே வளரும்படி என்னை அழைத்த தேவனே, நான் கற்றுக் கொள்பவைகளால் மனத்தாழ்மையிலே வளர்ந்து பெருகும்படி எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.